# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, நவம்பர் 01, 2019 இதழ் – **81**







**மக்களை ஓட்டைத் தோணியில் ஏற்றி நட்டாற்றில் விடாதீர்!**

பக்கம் - 03



**இந்த வேட்பாளரை தேர்ந்தெடுங்கள்!**

பெரும்பான்மையின நண்பன் ஒருவருடன் தேர்தல் பற்றி பேசிக்கொண்டிருந்தேன்.

பக்கம் - 06



**மாகோன் மகளார்**

வரலாற்றறிஞரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கதிராமன் தங்கேஸ்வரி

பக்கம் -11



**அக்கரைப்பற்று : 'நாங்கள் சிரிக்கவும் சிரிக்க வைக்கவும் தெரிந்தவர்கள்'**

பக்கம் - 12



## 'தேர்தல் பிரச்சாரத்துக்காக பிரதான வேட்பாளர்கள் இருவர் 760 மில்லியன் ரூபாய்கள் செலவு செய்துள்ளனர்'

-- தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தகவல்

நி.அமிர்தஸன்

---

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் பிரச்சாரங்களுக்காக இதுவரை பல மில்லியன் ரூபாய்களை செலவிட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் கூட்டிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று வாரங்களில் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக இவர்கள் இவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியள்ளார்.

இவற்றில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் எழுநூற்றி 60 மில்லியன்களைச் செலவிட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தப் பிரதான கட்சிகளின் வேட்பாளர்களில் ஒருவர் அச்சு ஊடகங்களுக்காக 48 மில்லியன் ரூபாயையும் மின்னணு ஊடகங்களுக்காக 432 மில்லியன் ரூபாய்களையும் செலவிட்டார்.

மற்றைய பிரதான வேட்பாளர் அச்சு ஊடகங்களுக்காக 129 மில்லியன் ரூபாய்களையும் மின்னணு ஊடகங்களுக்காக 151 மில்லியன் ரூபாய்களையும் செலவிட்டுள்ளார் என மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏனைய முப்பத்து மூன்று வேட்பாளர்களும் இதுவரை இரண்டு பில்லியன் ரூபாய்களைச் செலவிட்டுள்ளதாகவும் தேர்தல் வன்முறை கண்காணிப்பு கேந்திரத்தின் தேசிய கூட்டிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதம் 16 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பாகிஸ்தான் ரயிலில் தீ விபத்து; 65 பேர் பலி

பாகிஸ்தானின் கராச்சியில் இருந்து ராவல்பிண்டிக்கு சென்று கொண்டிருந்த தாஜ் ஜெம் எக்ஸ்பிரஸ் ரயிலில் ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது 65 பேர் உயிரிழந்துள்ளனர்.

ரயிலில் பயணித்தவர்கள் எரிவாயு சிலிண்டரை எடுத்துவந்ததால் இந்த தீ விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த தீ மூன்று ரயில் பெட்டிகளில் பரவியதாகக் கூறப்படுகிறது.

பலர் எரியும் ரயிலில் இருந்து தப்பிக்க வெளியே குதித்ததால் உயிரிழந்ததாக அதிகாரிகள் உள்ளூர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் இதுவரை 30 பேர் காயமடைந்துள்ளனர், மேலும் உயிரிழப்புகள் அதிகரிக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

"இரண்டு சமையல் அடுப்புகள் வெடித்துவிட்டன. அவர்கள் சமைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் வைத்திருந்த

தொடர்ச்சி பக்கட் 15....

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள்




உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தனது பணிகளை முன்னெடுத்துள்ளது.

ஆணைக்குழு சாட்சிகளை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை வியாழனன்று

## 17 கட்சிகளின் கூட்டமைப்பு

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட 17 கட்சிகள் இணைந்த புதிய கூட்டமைப்பிற்கான ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்பட்டுள்ளன.

எதிர்வரும் தேர்தல்களிலும் ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன முன்னணி என்ற கட்சியின் ஊடாக இவை போட்டியிடும் என்று அந்தக் கூட்டணியின் சார்பிலான




தொடர்ச்சி பக்கட் 15....

## ஜனாதிபதி தேர்தல் பிரச்சார காலத்தில் இதுவரை 2250 முறைப்பாடுகள்

ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய 2250 முறைப்பாடுகள் இதுவரை பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு கூறியுள்ளது.

கடந்த 08 ஆம் திகதி தொடக்கம் புதன் (30) வரை குறித்த முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையில், தேர்தல் விதி மீறல்கள் தொடர்பில் 2143 முறைப்பாடுகளும், வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 20 முறைப்பாடுகளும் மற்றும் 87 வேறு முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.



புதனன்று (30) பிற்பகல் 4 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24

## ஒன்றரைக்கோடிருபா பெறுமதியான கண்சிகிச்சை சாதனம் அன்பளிப்பு.



(காரைதீவு நிருபர் சகா)

லண்டன் புதுவாழ்வும் புனர்வாழ்வும் அமைப்பு சுமார் ஒன்றரைக்கோடிருபா பெறுமதியான கண் சத்திரசிகிச்சைக்கான நவீன சாதனமொன்றை கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளது.

இச்சாதனத்தை கையளிக்கும்வைபவம் நேற்று கல்முனை ஆதாரவைத்தியசாலை வைத்தியஅத்தியட்சகர் வைத்தியகலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் வைத்தியசாலையின் மேல்தள கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

அவ்வமைப்பின் பிரதான வழங்குநர் மார்க் பெனி லண்டனிலிருந்து நேரடியாகவிஜயம் செய்து அச்சாதனத்தை வழங்கிவைத்தார்.தலைவர் மார்க்பெனி தனது மனைவி மற்றும் பிரதிநிதிகளுடன் லண்டனிலிருந்து வந்து கலந்து கொண்டிருந்தார்.

கல்முனை ஆதாரவைத்தியசாலையின் கண்சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி டாக்டர் கே.பிரேம்ஆனந்த் அந்த நவீன சாதனத்தைக் கையேற்றுக்கொண்டார். புதுவாழ்வும் புனர்வாழ்வும் அமைப்பின் ஸ்தாபகரும் சர்வதேச தலைவருமான பொறியியலாளர் கலாநிதி v..சர்வேஸ்வரன் இலங்கைக்கான தலைவர்; பொறியியலாளர் ஹென்றி அமல்ராஜ் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

கல்முனை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்ற வைபவத்தில் அமைப்பின் லண்டன் பிரதிநிதிகளும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் கலந்துசிறப்பித்தனர்.

எதிர்காலத்தில் இதுபோன்ற உதவிகளை கண்சத்;திரசிகிச்சை தொடர்பில் மேலும் வழங்க தயாராகவிருப்பதாக சர்வதேச பணிப்பாளர் கலாநிதி ரி.சர்வேஸ்வரன் தெரிவித்தார். அம்பாறை மாவட்ட கரையோரப்பிரதேசத்தில் இத்தகையதொரு நவீன சாதனம் வரலாற்றில் முதற்தடவையாக இவ்வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அதன்பலனாக கரையோரப்பிரதேச மக்கள் பாரிய பயனைப்பெறவுள்ளனர். அதற்காக அவ்வமைப்பிற்கு பலகோடி நன்றிகள் தெரிவிக்கப்பட்டதுடன் பிரதிநிதிகளுக்கு பொன்னாடைபோர்க்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

அவ்வமைப்பின்பிரதான வழங்குநர் மார்க் பெனி மற்றும் அவரது மனைவி இத்தகைய உதவிகளை வழங்குவதற்காக லண்டனில் வாரமொருதினம் 55கி.மீற்றர் தூரம் நடைபவனியை மேற்கொண்டு பணம்சேகரித்து இத்தகைய மனிதாபிமான உதவிகளை வழங்கிவருகிறார்.

## அம்பாறை மாவட்டசெயலகத்தால் 75சாதனை மாணவர்கள் பாராட்டு



(காரைதீவு நிருபர் சகா)

சிறுவர் பராமரிப்பு நன்னடைத்தை திணைக்கத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தில் தேசியமட்டத்தில் சாதனை நிலைநாட்டிய மாணவர்கள் 75 பேரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.
இப்பாராட்டுவிழா அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல். பண்டாரநாயக்க தலைமையில் சிறுவர் நன்னடத்தை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஒ.எவ். சரீபாவின் ஒருங்கிணைப்பின் கீழ் நடைபெற்றது.

நிகழ்வில் அரசாங்க அதிபர் டி.எம். எல்.பண்டாரநாயக்க, மேலதிக அரசாங்க அதிபர்களான வீ.ஜெகதீசன் அப்துல் லத்தீப் சம்மாந்துறை உதவிபிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு மாணவர்களைப்பாராட்டிக் கௌரவித்தனர்.

கௌரவிக்கப்பட்ட தேசியரீதியில் சாதனைபடைத்த 75 மாணவர்களுள் 5 பேர் கண்டுபிடிப்புத்துறைச்சாதனையாளர்களாக கௌரவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டு ஊடக அமையம்

மட்டக்களப்பின் ஊடகத்துறை வரலாற்றில் மற்றுமொரு பதிவாக மட்டு ஊடக அமையம் திறக்கப்பட உள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் மட்டக்களப்பு பேருந்து நிலையத்திற்கு மேல் அமையப்பெற்றுள்ள கட்டிடத்தில் மேற்படி மட்டு ஊடக அமையம் திறக்கப்படவுள்ளது.
இவ் ஊடக அமையத்தின் திறப்பு விழா நிழ்வானது எதிர்வரும் 03 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற உள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் மற்றும் மட்டக்களப்பு மாநகர மேயர் தி.சரவணபவன் ஆகியோரினால் மட்டு ஊடக அமையம் திறந்து வைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் அனைத்து ஊடகவியலாளர்களையும் கலந்துகொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

மேற்படி ஊடக அமையத்திலேயே மட்டக்களப்பு மாவட்டத்திற்குரிய ஊடக சந்திப்புக்கள் அனைத்தும் இடம்பெறும் என்பதை மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 154 வாக்கெடுப்பு நிலையங்களில் தபால் மூலமான வாக்கெடுப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் வியாழன் மற்றும் வெள்ளியில் தபால் மூலமான வாக்கெடுப்பு நடைபெற்றது. இந்த தேர்தல் கடமையில் 32 உதவி தெரிவு அத்தாட்சி அலுவலர்கள் கடமையில் ஈடுபட்டுவருவதாகவும் 154 வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு அரச திணைக்கள உத்தியோகத்தர்களின் வாக்களிப்பு இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 11983 வாக்காளர்கள் விண்ணப்பித்து இருந்தனர். இதில் 461 பேருடைய வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. தற்போது 11522 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். வாக்களிக்க தவறுகின்ற அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 7ம் திகதி 8.45 முதல் 4.15 வரை உள்ள காலப்பகுதியில் மட்டக்களப்பு உதவி தேர்தல் ஆணையாளர் அலுவலகத்திற்குச் சென்று நேரடியாக வாக்களிக்க முடியுமென மாவட்ட தெரிவு அத்தாட்சி அதிகாரி மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

மாவட்டத்தில் 154 வாக்கெடுப்பு நிலையங்களை கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுவதற்கு 32 உதவி தெரிவு அத்தாட்சி அதிகாரிகள் செயற்பட்டு வருகின்றனர். இவர்களின் கடமைகளுக்கு பாதுகாப்பு வழங்கும் முகமாக பொலிஸ் பிரிவினரால் ரோந்து நடவடிக்கையும் , காவல் நடவடிக்கையும் ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாக தெரிவு அத்தாட்சி அதிகாரி மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

## சிறப்பாக உதயமான அம்பாறை மாவட்ட எழுத்தாளர் பேரவை!

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட செயலகம் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு எழுத்தாளர் சந்திப்பொன்றை காரைதீவு மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் மாவட்டகலாசார உத்தியோகத்தர் எ.எம்.றின்சான் தலைமையில் நடாத்தியது.

இச் சந்திப்பின்போது புதிதாக அம்பாறை மாவட்ட எழுத்தாளர் பேரவையொன்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சட்டத்தரணி எ.எம்.லத்தீப் பிரதம அதிதியாககலந்துகொண்டார்.

பேராசிரியர் றமீஸ்அப்துல்லா, டாக்டர் புஸ்பலதா லோகநாதன், எழுத்தாளர் பீர்முகம்மட், கல்வியியலாளர் வி.ரி. சகாதேவராஜா, விமர்சகர் ஜெஸ்மிமூசா உளளிட்ட பல எழுத்தாளர்கள் அங்கு உரையாற்றினர்.

அம்பாறை மாவட்டத்தில் கலை இலக்கியத்துறையில் நூல்களை வெளியிட்ட எழுத்தாளர்களை ஒன்றுதிரட்டி மாவட்ட நூல்வெளியீட்டாளர்கள் பேரவையொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. நிருவாகசபை தெரிவானது.

தலைவராக மேலதிகஅரசாங்க அதிபர் எ.ம்.லத்தீப், இணைப்பாளராக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் றிம்சான் ஆகியோர் பதவிவழி தெரிவானார்கள். உபதலைவர்களான எழுத்தாளர் வி.ரி. சகாதேவராஜா, கவிஞர் பாலமுனை பாறுக், செயலாளராக கவிஞர் விஜிலிமூஸா, உபசெயலாளர்களாக எழுத்தாளர் ஜெகதீஸ்வரிநாதன், கிராமத்தான் கலீபா, பொருளாளராக எ.எம்.மக்கீன்சா ஆகியோருடன் பிரதேச செயலக ரீதியாக ஒவ்வொரு எழுத்தாளரும் தெரிவானார்கள்.

அடுத்த திட்டமிடல் அமர்வு எதிர்வரும் 30ஆம் திகதி நிந்தவூர் பிரதேசத்தில் நடைபெறும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## புள்ளடியிடப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் சமூக வலைத்தளங்களில் தரவேற்றம் - 3 வருட சிறைத்தண்டனை



தபால் மூல வாக்களிப்பின் போது வாக்குச் சீட்டில் புள்ளடியிடுவதை புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளங்களில் வெளியிடும் அரச அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். வியாழன் முதல் தபால் மூல வாக்களிப்பு இடம்பெற்றது. இந்த வாக்களிப்பை புகைப்படம் எடுத்து முகப்புத்தகம் போன்ற சமூக வலைத்தளங்களில் தரவேற்றம் செய்வது முற்றுமுழுதாக தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு செயற்படும் ஊழியர்களை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குற்றமிழைத்தவராக கருதப்படும் சந்தர்ப்பத்தில் 3 வருட கால சிறைத்தண்டணை விதிக்கப்படும். இதற்கு உதவி ஒத்தாசை வழங்குவோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தபால் மூல வாக்களிப்பு அமைதியான முறையில் நடைபெற்றதாக வியாழனன்று கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். காலையில் இருந்து பெரும் எண்ணிக்கையிலாக ஊழியர்கள் வாக்களித்துள்ளனர்.

# மக்களை ஓட்டைத் தோணியில் ஏற்றி நட்டாற்றில் விடாதீர்!

அரசியலில் மக்களுக்கு தலைமை ஏற்பது மாத்திரமல்லாமல், அவர்களுக்கு அரசியல் கொள்கை ரீதியாக வழி காட்ட வேண்டிய பணியும் அரசியல் கட்சிகளுக்கு இருக்கின்றது.

அந்த விடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ் மக்களை கைவிட்டு விட்டனவோ என்று எண்ணத்தோன்றுகின்றது.

குறிப்பாக, இந்த ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஐந்து ஆண்டு காலத்தில் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகிற ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கானது. ஜனாதிபதிக்கான அதிகாரங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டாலும் அவரின் முக்கியத்துவம் இன்னமும் குறையவில்லை. இன்னமும் அவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிதான்.

அப்படியான ஒரு பதவிக்கு ஒருவரை தேர்ந்தெடுப்பது தொடர்பில் பல மாதங்களுக்கு முன்பிருந்தே தமிழ் கட்சிகள் மக்களை வழிநடத்தியிருக்க வேண்டும்.

இன்றோ இல்லை இன்னும் சில தினங்களிலோ ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு குறித்து முக்கிய ஐந்து தமிழ் கட்சிகள் அறிவிக்கலாம் அல்லது மக்களே தமது முடிவை எடுங்கள் என்று கூறலாம் அல்லது எதுவும் பேசாமலும் போகலாம். ஆனால், எற்கனவே மக்களை இந்த விடயத்தில் முடிவெடுத்து மக்களை வழிநடத்துவதில் காலம் கடந்துவிட்டது என்றே படுகின்றது.

இவ்வளவு காலத்துக்குப் பின்னர் வரப்போகின்ற முடிவு அறிவிப்புகள் மக்களை குழப்பவே செய்யும்.

உண்மையில் முக்கிய தமிழ் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் முழுத் தமிழ் மக்களின் அபிலாஷைகள் உள்ளடக்கப்படவில்லை என்பதையும், சில பிரதேச(குறிப்பாக கிழக்கு) மக்களின் அபிலாஷைகள் புறந்தள்ளப்பட்டுள்ளன என்பதையும் நாம் கடந்த வாரம் கூறியிருந்தோம். அதுமாத்திரமன்றி அவை குறித்து நாம் சுட்டிக்காட்டிய பின்னரும் அந்தக் கட்சிகள் அவை பற்றி அலட்டிக்கொள்ளவில்லை. ஆகவே இந்தக்கட்சிகள் கிழக்கு மக்கள் மீது எந்தவிதமான அக்கறையும் இன்றியே இருக்கின்றன என்பதையே இவை உறுதி செய்கின்றன. இதனைவிட காலம் தாழ்த்தி இவை முடிவு எடுப்பதால் ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் இது குழப்பத்தையே ஏற்படுத்தும்.

கடந்த காலங்களைப் போல மக்களை உணர்ச்சியூட்டி, அவர்களை உணர்ச்சிவசப்பட்டு முடிவெடுக்கவும், யதார்த்த நிலையை புறந்தள்ளி அவர்கள் முடிவெடுக்கவும் இந்த நிலைமை வழி செய்யும். கடந்த காலங்களில் இப்படியாக தமிழர்கள் எடுத்த முடிவுகளே தமிழர் அழிவுகளுக்கு காரணமாக அமைந்துள்ளன.

அதற்கு ஒரு முக்கிய உதாரணம்

**சீவகன் பூபாலரட்ணம்**

ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு கடந்த ஜனாதிபதி தேர்தல் ஒன்றில் விடுதலைப்புலிகள் வைத்த கோரிக்கை. ரணில் தம்மை ஏமாற்றுவார் என்று கருதி, அவருக்கு தமிழ் மக்களின் ஆதரவு அதிகம் இருந்த சூழலில் இரு மாவட்டங்களில் மக்களை தேர்தலை பகிஸ்கரிக்கச் செய்து, ராஜபக்ஷ அவர்களை விடுதலைப்புலிகள் அப்போது வெற்றிபெற வைத்தனர். அதன் விளைவு அவர்களே அவர்கள் தலையில் மண்ணை அள்ளிப்போட்டதாக முடிந்தது. இது ஒரு சரித்திரம். யாரும் மறுக்க முடியாதது. அது விடுதலைப்புலிகளில் அழிவுக்கு மாத்திரமல்லாமல் பல்லாயிரம் தமிழ் மக்களின் அழிவுக்கும் வழி செய்தது.

இப்போது இந்தத் தமிழ் கட்சிகள் இந்த 13 அம்சக் கோரிக்கை, அதனை வைத்து முடிவெடுத்தல் என்று கூறுவதெல்லாம் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான கட்சியின் வேட்பாளரான சஜித்துக்கு மக்களை வாக்களிக்க வைக்கவோ என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் பரவலாக உண்டு.

உண்மையில் தாம் எடுக்கும் முடிவில், அறமும், யதார்த்தமும், உறுதியும் இருந்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட்ட கட்சிகள் அதனை முன்னதாகவே கூறி, அதற்காக வலுவாக வேலை செய்திருக்க வேண்டும். எதனையும் வெளிப்படையாக அறிவித்திருக்க வேண்டும். அதனைவிட்டு காலந்தாழ்த்தி இனி வெளியிடுவது மக்களை குழப்புவதற்கான ஒரு முயற்சியே.

மக்கள் உண்மையில் தம்மை தலைமைதாங்கும் அல்லது தமக்கான கோரிக்கைகளை முன்னெடுக்கும் கட்சிகள் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும் என்றே எதிர்பார்ப்பார்கள். உண்மையில் அதுவே அவர்களுக்கும் தேவை. ஆனால், தமது நிலைப்பாட்டை நேரடியாக, வெளிப்படையாக மக்களிடம் கூறமுடியாமல் ஒழிவு மறைவுடன் செயற்பட்டு மக்களை குழப்புவது பிற்போக்குத் தனமான கட்சிகளின் செயலே.

இப்படியானவர்களைப் பார்த்துத்தான் தந்தை செல்வா " தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று கூறினாரோ தெரியவில்லை.

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திறனும் இன்றி அரசியல் நடத்த முடியாது. அதுவும் ஒரு பெரும் போரினால் அழிந்து போய்க்கிடக்கும் மக்களை வழிநடத்த நேர்மை வேண்டும். அந்த நேர்மை தங்களிடம் இருக்கின்றதா என்பதை தமிழ் கட்சிகள் தம்மைத் தாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

ஏற்கனவே அழிவுகண்ட மக்களை மீண்டும் அதே ஓட்டைத் தோணியில் ஏற்றி நட்டாற்றில் விட முனையக் கூடாது. அவர்களின் எதிர்காலம் குறித்த பொறுப்புணர்வு இவர்களுக்கு வேண்டும்.

அது மாத்திரமன்றி ஏற்கனவே இரு முக்கிய வேட்பாளர்களும் கிட்டத்தட்ட இவர்களது கோரிக்கைகளை நிராகரித்துவிட்டனர். நிராகரிக்கப்படக் கூடிய கோரிக்கையை முன்வைத்ததே முதல் தவறு. அதுவும் ஒற்றை ஆட்சி போன்ற விடயங்களை கடந்த காலங்களில் மறைமுகமாகவெனினும் ஏற்றுக்கொண்டு விட்ட கூட்டாட்சிதான் வேண்டும் என்று திரும்ப கோரிக்கை வைத்தது எல்லாம் எந்தக் காலத்துக்கும் உதவாத அரசியல். அது மக்களை படுகுழியில் கொண்டு தள்ளிவிடும்.

இனியும் பொறுப்பற்ற விதத்தில் இந்தக் கட்சிகள் தமது நடவடிக்கைகளை தொடர்ந்தாலும், மக்களும் அவர்களை உணர்ச்சி வசப்பட்டு தொடர்ந்தாலும் நன்மை எவருக்கும் இல்லை.

---



## சொல்லத் துணிந்தேன்! 24

பௌத்த – சிங்கள பேரினவாதம் என்பது ஓர் ஆக்கிரமிப்பு - ஆதிக்க - அடக்கு முறைக் கருத்தியலாகும். அடக்கு முறைக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் உள்ளாகும் ஒரு சமூகம் அல்லது இனக்குழுமம் அதற்கு எதிராகப் போராடுவது தவறல்ல. போராடத்தான் வேண்டும். அத்தகைய போராட்டம் தெளிவான தத்துவார்த்தத் தளத்தில் மக்கள் நலன் சார்ந்த புரட்சிகரக் கோட்பாடுகளாலும் முற்போக்குச் சிந்தனைகளாலும் கட்டமைக்கப்படல் வேண்டும். அப்போதுதான் அப்போராட்டம் வெற்றிபெறும்.



ஆனால் பௌத்த – சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான இலங்கைத் தமிழர்களின் போராட்டம் யாழ்மேலாதிக்க மேட்டுக்குடி அரசியல் சிந்தனைகளால் கட்டமைக்கப்பட்டு, அது குறுந்தமிழ்த்தேசியவாதமாக முடிவெடுத்து இறுதியில் இலங்கைக்கு எதிரான – சிங்களவர்களுக்கு எதிரான அதாவது இலங்கையை - சிங்களவரைப் பழிதீர்த்துக் கொள்ளும் போராட்டமாகத் திசைமாறியதே, இப் போராட்டம் இதுவரை அகிம்சைவழியிலும், ஆயுதப்போராட்டத்திலும், இராஜதந்திர ரீதியாகவும் தோல்வியுறக் காரணமாகும். எப்போது ஒரு போராட்டம் தனது தத்துவார்த்தத் தளத்திலிருந்து தடம் புரளுகிறதோ அப்போது அப்போராட்டம் தனது தார்மீகத்தை இழந்து தோல்வியுறுகிறது.

அகிம்சைப்போராட்டமென்றாலும் சரி ஆயுதப்போராட்டம் என்றாலும் சரி தமிழர்களுடைய போராட்டத்தில் வீரம் இருந்த அளவுக்கு விவேகம் இருக்கவில்லை. மறம் இருந்த அளவுக்கு அறம் இருக்கவில்லை. மனிதநேயம் முன்னுரிமை பெறவில்லை. தமிழர்களுடைய அகிம்சைப்போராட்டமும் அதனைத் தொடர்ந்த ஆயுதப்போராட்டமும்

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

தோல்வியுறக் காரணம் இதுதான் என்ற உண்மையைத் 'தமிழ்த்தேசிய உணர்வாளர்'களுக்கு அது சற்றுக் கசப்பானதாக இருந்தாலும்கூட - சீரணித்துக் கொள்வதற்குச் சற்றுச் சிரமமானதாக இருந்தாலும்கூட தமிழர்தரப்பு அதனை நேர்மையாக ஒத்துக் கொண்டு தன்னைச் சுயவிமர்சனம் செய்யும்போது மட்டுமே இனிமேல் செல்லும் திசை தெளிவாகத் தெரியும்.

தமிழர்களுடைய உரிமைப் போராட்டத்திலிருந்த அத்தனை நியாயங்களும் பின்னாளில் பாசிசத்தின் பாதணிகளின்கீழ் நசுங்குண்டு போராட்டமானது வன்முறைக் கலாசாரமாக வடிவெடுத்தபோது போராட்டத்திற்கு ஆதரவாக இருந்த உள்நாட்டு, வெளிநாட்டு நேசசக்திகள்கூட தமிழர்களிடமிருந்து அந்நியப்பட நேர்ந்தன. இயக்க மோதல்கள் - சகோதரப்படுகொலைகள் - அப்பாவித் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் தமிழ்த்தேசியப் போராட்டப் போர்வையில் கொல்லப்பட்டமை என்பனவும் எதிர்மறைக் காரணங்களாயின. இந் நிலைமை இறுதியில் தமிழர்களுக்கு அழிவுகளையே கொண்டு சேர்த்தன. இந்த அனுபவப் பின்புலத்தில்தான் எமது எதிர்காலத் திட்டமிடல்களும் அரசியல் தயார்ப்படுத்தல்களும் அவசியம்.

பௌத்த – சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான செயற்பாடுகள் இலங்கைக்கு எதிரான – சிங்களவர்களுக்கு எதிரான பழிதீர்க்கும் நடவடிக்கைகளாக மாறுவது எவ்வளவு தவறானதோ அதேபோலத்தான் யாழ்மேலாதிக்க மேட்டுக்குடி அரசியல் சிந்தனைகளுக்கு எதிரான கிழக்குத்தமிழர்களின் உணர்வுகள் மற்றும் செயற்பாடுகள் வடமாகாணத்திற்கு எதிரானதாக – வடமாகாணத் தமிழர்களுக்கு எதிரானதாக – வடக்கு கிழக்கு இணைந்த தாயகக்கோட்பாட்டிற்கு எதிரானதாக மாறுவதும் தவறானதே. யாழ்மேலாதிக்கத்திற்கு எதிரான உணர்வுகள் மற்றும் செயற்பாடுகள் பிரதேசவாதமாக பிறழ்வடையக்கூடாது.

வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் தனித்தனி மாகாணங்களைப் பிரிக்கப் பெற்ற பின்னர் கிழக்கில் உருவாகி இருக்கும் களநிலையில் வடக்கு மாகாணத்திற்குரிய அரசியல் சமன்பாடு கிழக்கு மாகாணத்திற்குப் பொருந்தமாட்டாது என்பது அரசியல் யதார்த்தம். அதாவது வடக்கு மாகாணத்திற்கும் கிழக்குமாகாணத்திற்கும் ஒரு பொதுவான அரசியல் சமன்பாடு பொருந்தமாட்டாது.

இந்த அரசியல் யதார்த்தத்தை வடக்கைத் தளமாகக் கொண்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்றாலும் சரிதான் அல்லது புதிய 'தமிழ்மக்கள் கூட்டணி' என்றாலும் சரிதான் புரிந்து கொண்டு கிழக்கு மாகாணத் தமிழர்கள் தங்கள் தனித்துவமான பிரச்சினைகளைக் கையாள்வதற்கு எடுக்கும் சில தனித்துவமான அரசியல் அணுகுமுறைகளைக் குழப்பக்கூடாது. களநிலை அறிந்து - காலத்தின் தேவை அறிந்து கிழக்குமாகாணத் தமிழர்கள் கையாளும் தனித்துவமான அரசியல்பாதையில் குறுக்கே நில்லாது வழிவிடுவதுதான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்கள் கூட்டணியும் மற்றும் வடக்கு மாகாணத்தைத் தளமாகக்கொண்ட ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளும் செய்யவேண்டிய அறிவுபூர்வமான செயற்பாடாகும். இதுவே

தொடர்ச்சி பக்கட் 15

# 13 அம்சக் கோரிக்கைகளும் தமிழ் மக்களின் பிரச்சினைகளும்

எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவ பிரதிநிதிகளினதும் கிழக்குப் பல்கலைக் கழக மாணவ பிரதிநிதிகளினதும் ஏற்பாட்டில் ஒன்று கூடிய தமிழ் கட்சிகளில் ஐந்து தமிழ் கட்சிகள் 13 அம்சக் கோரிக்கைகளை தயாரித்து அவற்றை ஏற்கின்ற சனாதிபதி வேட்பாளரைத்தான் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தன.

இந்தக் கோரிக்கைகள் ஊடகங்களில் வெளிவந்தவுடனே நடைமுறை அரசியல் தொடர்பாகச் சிந்திக்கும் தமிழர்கள் இவற்றை சிவாஜிலிங்கத்தைத் தவிர்ந்த எந்தவொரு சனாதிபதி வேட்பாளரும் ஏற்கப்போவதில்லை என்பதை உணர்ந்திருந்தனர். அதே போன்று முக்கிய மூன்று சனாதிபதி வேட்பாளர்களும் இவை கையளிக்கும் முன்பே நிராகரித்து விட்டனர். தற்போது தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி கலந்துரையாடிக்கொண்டிருப்பதாகச் செய்தி, ஐந்து தமிழ் கட்சிகளும் எடுக்கின்ற முடிவை தமிழ் மக்கள் ஆதரிப்பார்கள் என தாம் நம்புவதாக சுரேஸ் பிரேமச்சந்தின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடத்தில் ஒரு சாதாரண அரசியல் வாசகன் என்ற அடிப்படையில் பின்வரும் கேள்விகள் எழுவதைத் தவிர்க்க முடியாது.

1. இக் கோரிக்கைகள் ஏற்கப்படும் என்ற நம்பிக்கையிலா முன்வைக்கப்பட்டன?

2. ஏற்கப்படாதவிடத்து அடுத்ததாக என்ன செய்வது என்ற மாற்று வழி எதுவுமின்றியா கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன?

3. மாற்றுவழி இருந்திருக்குமாயின் அதன் பின் எதற்கு இத்தனை கலந்துரையாடல்கள்?

4. சனாதிபதித் தேர்தலில் ஏன் இவ்வாறான நிபந்தனைகளை விதிப்பதற்கு இக்கட்சிகள் முற்பட வேண்டும்.

5. பலமுறை ரணில் அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைகளின் போது எவ்வித நிபந்தனைகளுமின்றி ரணிலுக்குச் சார்பாக வாக்களிக்கும் போது இந்த பல்கலைக் கழகப் பிரதிநிதிகளும் கட்சிகளும் எங்கே போய் ஒளித்திருந்தார்கள், அப்போதெல்லாம் இக் கோரிக்கைகளுக்கான தேவை இருக்கவில்லையா?

6. இக் கோரிக்கைகளில் கிழக்கின் தேவைகள் பிரச்சினைகள் எதனையும் முன்வைக்காதது ஏன்?

போன்ற கேள்விகள் எழுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது. இவற்றுக்கான பதிலை வாசகர்களின் தேடலுக்கே விட்டுவிடுவோம்.

தமிழர்களுக்கு அரசியல் தலைமையேற்று நடத்திய / நடத்திக் கொண்டிருக்கும் யாழ் மையவாத அரசியல் ஒருபோதும் நடைமுறை அரசியல் தொடர்பாகவோ அல்லது தந்திரோபாய அரசியல் தொடர்பாகவோ எந்தப் புரிதலுமின்றி இலட்சியவாத அரசியலையே நடாத்திக் கொண்டிருப்பதை டொனமூர் அரசியல் திட்ட பகிஸ்கரிப்புக் காலம் தொடக்கம் புரிந்து கொள்ளமுடியும். ஆனால் சாதாரணத் தமிழ் மக்கள் இந்த இலட்சிவாத அரசியலின் வர்க்கநலனை புரிந்து கொண்டு செயற்படுவதாக இல்லை. அந்தப் புரிதலினை ஏற்படுத்தவதற்கான வலுவான மாற்று அரசியல் அமைப்புகளும் தமிழர்களிடத்தில் இல்லாமல் செய்யப்பட்டு விட்டது.

இந்த இலட்சியவாத அரசியலின் தற்போது நிகழ்ந்திருக்கும் தோல்விதான் ஐந்து தமிழ் கட்சிகளின் தற்போதைய 13 அம்சக் கோரிக்கைகளாகும். யாழ்ப்பாணத்திலிருக்கும் புத்திஜீவிகளும் சரி, அரசியல் பத்தி எழுத்தாளர்களும் சரி தற்போதைய அரசியல் சூழ்நிலையில் இந்த 13 அம்சக் கோரிக்கையின் நடைமுறைத் தன்மைபற்றியோ அல்லது அதன் கருத்தியல்தளம் பற்றியோ எதுவும் எழுதாது வழமைபோல் பேரினவாத அரசின் சனநாயக மறுப்பாகவும் தமிழர்களுக்கு வழங்கப்படும் அநீதியாகவுமே எழுதிவருகிறார்கள். காலங்காலமாக தமிழர்களுடைய அரசியல் தலைவிதியைத் தீர்மானிப்பவர்களாக இருந்துவருபவர்களின் முடிவுகளுக்கு நியாயப்பாட்டை

**கிழக்குத் தமிழர் பிரச்சினை புறக்கணிப்பா?**

வழங்குபவர்களாகத்தான் இந்த யாழ் அதிகாரத்துவ மையவாத ஊடகங்களும் அவற்றின் பத்தி எழுத்தாளர்களும் இருந்து வருவதில் இதுவரைகாலமும் எவ்வித மாற்றமும் நடைபெறவில்லை என்பதையும் இது எடுத்தக்காட்டுகின்றது. விமர்சனமற்ற நியாயப்பாடுகளும் ஒரு குழுவின் முடிவை மொத்த தமிழர்களின் முடிவாகக் கட்டமைத்து பொதுநிலைப்படுத்தி அரசியலாக்கியமைளும்தான் இன்றைய தமிழர்களுடைய அரசியல் நிலைக்கு காரணம் என்பதை எத்தனை பத்தி எழுத்தாளர்களும் புத்திஜீவிகளும் ஏற்றுக்கொள்வார்களோ தெரியாது. ஆனால் இதனை ஏற்றுக்கொள்பவர்களை அல்லது இவ்வாறு கூறுபவர்களை தேசியத் துரோகிகளாகவும் பிரதேசவாதிகளாகவும் பேரினவாதத்தின் அடிவருடிகளாகவும் கட்டமைத்து அரசியல் பொதுவெளியில் இருந்து ஒதுக்குவதற்கு இவர்கள் முழுமூச்சுடன் ஓடிவந்து செயற்பட்டு ஒதுக்கித் தள்ளுவதற்குப் பின்நிற்கப் போவதில்லை. இதுதான் ஈழத் தமிழர்களுடைய அரசியல் சூழலாக இருக்கின்றது.

இந்தச் சூழலில் நின்றுகொண்டுதான் இந்தப் பிரச்சினைகளை அணுகவேண்டியுமுள்ளது. இன்றைக்கு தமிழர்கள் எவ்வாறான அரசியல் நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதும், எவ்வாறான அரசியல் நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பதும் பெரும்பான்மையான தமிழ் மக்களின் வாழ்நிலையைச் சார்ந்த விடயமாகும். இன்றைக்கு தமிழர்களின் உள்ளூர் அரசியல் பலம் 1950களில் இருந்த நிலைக்கு வந்து விட்டது. வடமாகாணத்தில் தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின்



விடுதலை, காணி மீட்பு, போன்றவற்றுக்காக போராடுபவர்களாகவும் சமூகப் பொருளாதாரம் மற்றும் கல்வி, சுகாதாரம், என்பவற்றில் பின்தங்கியவர்களாகவும் இருக்கிறார்கள்.

கிழக்கின் நிலை வடக்கின் நிலையுடன் சேர்ந்ததாக இருந்தாலும் கிழக்கின் சூழலுக்கான பிரத்தியேக அரசியல் நிர்வாகப் பிரச்சினைகளும் இருக்கின்றன. குறிப்பாக வடக்கிலிருந்து கிழக்கு பிரிக்கப்பட்டதன் பின் கிழக்குத் தமிழர்களின் இருப்பே கேள்விக்குறியாக உள்ளது. கல்முனைத் தமிழ் மக்கள் மிகச் சாதாரணமாக இலங்கை மக்கள் அனைவரும் பெற்றுக் கொண்டிருக்கின்ற

எழுவான் வேலன்

அரசின் நிர்வாகக் கடமைகளைக் கூட இலகுவாகப் பெறமுடியாதவாறு தடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் இந்த அடிப்படை உரிமைகளைத்தானும் பெற்றுக்கொடுக்க முடியாதளவுக்கு தமிழ் அரசியல் பலம் குன்றியிருக்கின்றது. சட்டரீதியாக ஆக்கப்பட்ட கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கான அதிகாரத்தினைக் கூட பெற்றுக் கொடுக்க முடியாதநிலையில் உள்ள நாம் மாநிலசுயாட்சிக்கான கோரிக்கைகளை முன்வைத்து அரசியல் செய்வது முற்றுமுழுதான வறட்டுவாதத் தன்மையே தவிர வேறில்லை.

அத்துடன் கல்வியிலும் பொருளாதாரத்திலும் மிக மோசமாக பின்தங்கிய நிலையில் கிழக்குத் தமிழர்கள் உள்ளார்கள். கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமலே உள்ளன. எந்தவிதமான உட்கட்டமைப்புகளும் இதுவரை சீர்செய்யப்படவில்லை. புலம் பெயர் தமிழர்கள் சிலர் வழங்கும் நிதியின் மூலம் சில பாடசாலைகளுக்கு தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றன. 10ம் ஆண்டு கற்கும் பிள்ளைகள் பலர் ஒரு வசனம் கூட எழுதத்தெரியாமல் உள்ளனர். சில கிராம மக்கள் தமது வாழ்வுக்காக மதம் மாறவேண்டிய சூழலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். சில கிராமங்களில் குடும்பம் குடும்பமாக மதம்மாறி மாற்று இனப் பெயர்களை சூட்டிக்கொண்டு தமது தமிழ் அடையாளத்தை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். இவை பற்றியெல்லாம் கவனத்தில் கொள்ளாது ஐந்து தமிழ் கட்சிகளும் பல்கலைக் கழக மாணவர்களும் வடகிழக்கு இணைப்பிலும் மாநில சுயாட்சியிலும் கனவு காண்பவர்களாக தமிழர்களை வைத்துக் கொண்டு பிழைப்புவாத அரசியல் செய்வதனையே நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு நாம் தமிழர்களின் வாழ்வாதாரத் தேவைகள் தொடர்பாகப் பேசுகின்றபோது அதனை அபிவிருத்தி அரசியலாகவும் அது தமிழர்களின் இத்தனைகால அரசியல் உரிமைப் போராட்டத்தினைக் கொச்சப்படுத்துவதாகவும் அவற்றை மழுங்கடிப்பதற்கான முயற்சியாகவும் குற்றஞ்சாட்டுகின்றனர். டேகார்ட் எனும் தத்துவஞானியின் புகழ்பெற்ற வசனம் ஒன்று உண்டு அதாவது 'நான் சிந்திக்கின்றேன் ஆகவே நான் இருக்கின்றேன்' என்பதாகும். இதனை எதிர்மறையாகக் கூறுவதாயின் 'நான் சிந்திக்கவில்லை ஆகவே நான் இருக்கவில்லை' என்று கூறலாம். இது போன்றே தமிழர்கள் இருக்கின்றார்கள் ஆகவே தமிழ் தேசியமும் இருக்கின்றது என்றும் தமிழர்கள் இல்லை அகவே தமிழ்த் தேசியமும் இல்லை என்ற முடிவுக்கு வரலாம். எனவே கிழக்கில் தமிழர்கள் எல்லோரையும் மாற்று இனத்தவராக மாற்றிவிட்டு தமிழ்த் தேசியம் பற்றி மட்டும் பேசுவதுதான் அதிகாரத்துவ வர்க்க அரசியலாக இருக்கின்றது.

சாதாரண மக்களின் கல்வியினையும் பொருளாதாரத்தினையும் பற்றி அக்கறை கொள்ளாது தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் தங்களுடையதும் தங்களுடைய பிள்ளைகளினது கல்வியிலும் பொருளாதாரத்திலும் மிக அக்கறையுடன் இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. 'உனக்கல்லடி உபதேசம் ஊருக்கு' என்பது போலதான் எமது தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களுடைய தமிழ் தேசியமும் ஆகும்.

எனவே தமிழ் மக்கள் இந்த மேட்டுக்குடி அரசியல்வாதிகளின் நலன்களுக்குள் தொடர்ந்தும் சிக்குண்டு தங்களையும் அழித்து தங்கள் சந்ததியினரையும் அழித்து மேட்டுக்குடியினரை மட்டும் வாழவைக்க முற்படாது, அரசியல் சூழலை தங்களுடைய இருப்புக்கு எவ்வாறு தக்கவாறு பயன்படுத்தலாம் எனச் சிந்தித்து முடிவெடுத்து தங்களுடைய கால்களை மிக உறுதியாக நிலத்தில் ஊன்றிக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. இவ்வாறு முடிவெடுப்பதின் ஊடாக எமது பிரச்சினைகளையும் தேவைகளையும் கருதாது எங்கள் சார்பில் தங்களுக்குத் தேவையான முடிவுகளை ஒரு சிலர் எடுப்பதற்கு அனுமதிக்கவும் மாட்டோம் என்பதை இத்தேர்தலின் ஊடாக தமிழ் மக்கள் புரியவைக்க வேண்டும்.

# பழிவாங்கும் மனநிலையில் தேர்தலை அணுகலாமா?



தேர்தல் என்பது மக்களின் ஆணைகளை தமது பிரதி நிதிகளுக்கு வழங்குகின்ற செயற்பாடாகும். அதன்படி 'எதிர்காலத்தில் சரியானதும் பொறுப்புமிக்கதுமான தலைமைத்துவத்தை வழங்குவார்' என்று எதிர்பார்க்கின்ற அல்லது நம்புகின்ற ஒருவரை நோக்கியே மக்களின் ஆணை வழங்கப்படுவது இயல்பானதாகும். அதுவே சரியானதும் கூட.

ஆனால் துரதிஷ்டவசமாக கடந்த காலங்களின் அரசியல் ரீதியிலும் சரி, ஆயுத ரீதியிலும் சரி எமது பார்வையானது எதிர்காலத்தையன்றி கடந்த கால பழிவாங்கும் அரசியலை நோக்கியே வழிநடத்தப்பட்டு வருகின்றது. இந்திய அமைதி காக்கும் படையின் அத்து மீறல்களுக்கு பழி வாங்குமதாக எண்ணி ராஜீவ் காந்தியை பழிவாங்கினோம். ஆனால் அந்த கொலையால் தமிழனத்துக்கு ஏதாவது நன்மை கிடைத்ததா என்றால் இல்லை. மாறாக இந்திய அரசு ஈழத்தமிழர்கள் மீது கொண்டிருந்த சாதகமான நிலைப்பாட்டை நாம் இழக்க நேரிட்டது. அதனால்தான் இறுதி யுத்த நேரத்தில் கூட இந்தியா எமது மக்களின் அழிவைக்கூட தடுக்க முன் வரவில்லை.

அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களை கொன்றதன் ஊடாக தமிழர்களின் அரசியல் போக்கு எதிர்கொண்ட அல்லது இன்றும் கொள்ள நேருகின்ற மிக பெரிய இராஜதந்திர சிக்கல்களில் முக்கிய வகிபாகமொன்றை வழங்கியிருக்கக் கூடிய ஒரு சிறந்த இராஜதந்திரியை நாம் இழந்தோம். அதேபோலத்தான் 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது மகிந்த ராஜபக்சவை பழிவாங்குவோம் என்று சூளுரைத்தோம். அதனிமித்தம் அவரது போட்டியாளரான சரத் பொன்சேகாவை ஆதரித்தோம். இறுதி யுத்தத்தை முன்னின்று நடத்திய இராணுவ தளபதியை ஆதரித்தன் மூலம் சர்வதேசத்திடம் யுத்தக்குற்றங்களுக்கான நீதியை கோருவதற்கான அருகதையை இழந்தோம். இலங்கையரசு மீதான யுத்தக்குற்றசாட்டுக்கள் நீர்த்து போனமைக்கு அதுவே முக்கிய காரணியாகும்.



**பழிவாங்கும் போக்கு அரசியலுக்கு ஆரோக்கியமானதல்ல. அவை வேண்டுமானால் தெருச்சண்டியர்களுக்கு சரியானதாக இருக்கலாம்.**

**'இனி ஒரு விதி செய்வோம்' கிழக்கில் இருப்பவர்களே கிழக்கு மாகாண அரசியலை பற்றிய முடிவுகளை எடுக்க முடியும் என்று உறுதி கொள்வோம்.**

எனவேதான் பழிவாங்கும் மனோபாவமும் தனக்கு மூக்குப்போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனப்பிழையாக இருக்க வேண்டும் என்கின்ற மூர்க்கத்தனமும் அரசியலுக்கு ஆரோக்கியமானதல்ல. அவை வேண்டுமானால் தெருச்சண்டியர்களுக்கு சரியானதாக இருக்கலாம். ஆனால் அரசியல் என்பது மக்களின் வாழ்வு சம்பந்தப்பட்டது. அவர்களின் எதிர்காலம் சம்பந்தமானது. பழிவாங்கும் மனோபாவம் என்பது அரசியல் முதிர்ச்சியின் அடையாளமல்ல. நமக்கு காரியங்கள் சித்தியாக வேண்டுமானால் அதற்கு சிறந்த ராஜதந்திர நகர்வுகளே அவசியமானவையாகும். ஒரு சரியான அரசியல் தலைமையின் இராஜதந்திர நகர்வுகளில் பழிவாங்கும் மனோபாவம் என்பது ஒரு போதும் ஆரோக்கியமான அணுகு முறையாக இடம்பிடிக்க முடியாது. காரிய சித்தி மட்டுமே அதன் குறிக்கோளாய் இருக்க வேண்டும்.

எனவே கடந்த யுத்த கால அழிவுகளையும் இழப்புகளையும் பேசிப்பேசியே நாம் காலங்களை இன்னும் வீணடித்துக் கொண்டிருக்க முடியாது. பழிக்கு பழி, கத்திக்கு கத்தி, கண்ணுக்கு கண் என்று எல்லோரும் எண்ணியிருந்தால் இப்பூவுலகில் இன்று எல்லோரும் கண்களற்ற குருடர்களாகவே அலைந்து திரிய நேர்ந்திருக்கும்.

எமது நாடு எதிர்கொண்ட அழிவுகளுக்கு நாமனைவருமே பொறுப்பானவர்களாகும். நம்மிடையே உள்ள அல்லது அரசியல் செய்கின்ற அனைத்து தரப்பினருமே எமது மக்களின் அழிவுகளுக்கு ஏதோ ஒரு வகையில் பொறுப்பு சொல்ல வேண்டியவர்கள்தான். ஆகவே பழங்கதைகளை ஒரு புறம் மூட்டை கட்டி வைப்போம். நாளை நடக்கப் போவதையிட்டு சிந்திப்போம், எதிர்காலத்தை எப்படி ஒளிமயமாக்குவது என்பதையிட்டு அக்கறை கொள்வோம், இன்றைய எமது இளம் சந்ததிகள் வளர்ந்து வரும் நவீன உலகுடன் போட்டியிட்டு முன்னேறுவதற்கான வாய்ப்புகளை வழங்க முயல்வோம், புதிய தேசமொன்றை கட்டியெழுப்பும் பணியில் அனைவரும் ஒருமித்து கை கோர்ப்போம்.

இத்தேர்தலை எதிர்கொள்ள முதலில் நாம் சில விடயங்களை கவனிக்க வேண்டும்.

சிங்கள பேரினவாத கட்சிகள் தரப்பினரை பொறுத்த வரையில் அது யாராக இருந்தாலும் அவர்கள் தமிழர்கள் மீது வன்முறைகளை நிகழ்த்தியுள்ளனர். ஒடுக்கு முறைகளை செய்துள்ளனர். எம்மக்கள் மீது காலத்துக்கு காலம் பல படுகொலைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இதில் மகிந்த தரப்பினர் அல்லது சஜித் பிரேமதாசா அல்லது ஜேஆர், ரணில், சந்திரிகா பண்டாரநாயக்க போன்ற எவரும் விதிவிலக்கில்லை.

**அறுமுகுட்டிபோடி**

2. தேர்தலில் முன்னணியில் உள்ள எந்த தலைமையும் அல்லது எந்தவொருவர் ஜனாதிபதியாக வந்தாலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பது ஒரு போதும் சாத்தியமற்றதொன்று, அவர்களில் யாரேனும் வடக்கு கிழக்கை இணைத்து எவ்விதமான புதியதொரு தீர்வு திட்டத்தையும் எமக்கு தரப்போவதில்லை.



ஆனால் நாம் விரும்பியோ விரும்பாமலோ இத்தகைய தலைமைகளின் தொடர்ச்சியான ஒருவரே ஜனாதிபதியாக வரப்போவது நிச்சயமாகும். ஆகவே எமது மக்கள் எதிர்கொள்ள நேர்ந்த அழிவுகளையும் உயிரிழப்புகளையும் அழிவுகளையும் பற்றி நாம் எத்தனை காலத்துக்கு பேசிக்கொண்டேயிருக்க போகின்றோம்? என்கின்ற கேள்வியை எழுப்புதல் இன்று அவசியமானதொன்றாகும். அத்தகைய சிந்தனை முறை ஒன்றே நாம் எதிர்காலம் நோக்கி முன்னோக்கி நகர்வதற்கான வழிமுறையாக இருக்க முடியும்.

சாத்தியமாகாத அல்லது நீண்டகால அடிப்படையான கோரிக்கைகளுக்காக நமது கண்முன்னே எதிர்கொள்கின்ற வாழ்க்கைப் போராட்டங்களை ஒதுக்கிவிட முடியாது. கொள்கைகள், கோட்பாடுகள், தத்துவங்கள் அனைத்தும் மக்கள் வாழ்வதற்கே அன்றி மக்களின் இருப்பே கேள்விக்குறியாக நிற்கும் அவல வாழ்வை அலங்கரிப்பதற்கல்ல. எனவேதான் பழிவாங்கும் மனோபாவத்தையும் காலம் கடந்துபோன கொள்கைகளையும் சற்றேனும் கைவிட்டு இன்றைய தேர்தலை நாம் எதிர்கொள்ள வேண்டும்.

இந்நிலையில் நடைமுறைச்சாத்தியமான விடயங்களில் எத்தகைய தலைமையை பயன்படுத்திக்கொள்ளமுடியும் என்பது குறித்தே நாம் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது. யுத்தம் முடிந்து பத்துவருடங்கள் சென்று விட்டது. இந்த இடைவெளியில் இரண்டு வெவ்வேறு விதமான ஆட்சியாளர்களை கடந்து வந்துள்ளோம்.

*யுத்த அழிவுகளில் இருந்து எந்த ஆட்சியாளர்கள் எமது மண்ணை புதுப்பொலிவுறச் செய்தனர்?

*இதில் யாரால் கிழக்கு தமிழர்கள் நன்மையடைந்தனர்?

* யாருடைய ஆட்சியில் கிழக்கு தமிழர்களுக்கு ஓரவஞ்சனை இழைக்கப்பட்டது?

என்கின்ற கேள்விகளுக்கு விடை காண முயல்வோம்.

இன்றோ கிழக்கு மாகாணத்தின் பிரச்சனைகள் விசேடமானவை, கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இருந்து கொண்டு தமிழ் தலைவர்களெடுக்கும் தீர்மானங்கள் கடந்த காலங்களில் தோல்வியை கண்டுள்ளன. அது மட்டுமன்றி எமது மக்களின் அவல வாழ்வுக்கு அத்தகைய முடிவுகளே காரணமாய் அமைத்துள்ளன.

எனவேதான் பாரதி சொன்னதுபோல் 'இனி ஒரு விதி செய்வோம்' கிழக்கில் இருப்பவர்களே கிழக்கு மாகாண அரசியலை பற்றிய முடிவுகளை எடுக்க முடியும் என்று உறுதி கொள்வோம்.

அதனுடாக கிழக்கு தமிழர்கள் ஒரு புதிய பாதையை நோக்கி முன்னேறுவோம். இல்லாவிட்டால் எமது எதிர்காலம் சூனியமாகி விடுவதை யாராலும் தடுக்க முடியாது போய் விடும் என்பது மட்டும் நிச்சயம்.

# இந்த வேட்பாளரைதேர்ந்தெடுங்கள்!



பெரும்பான்மையின நண்பன் ஒருவருடன் தேர்தல் பற்றி பேசிக்கொண்டிருந்தேன். குறிப்பிட்ட வேட்பாளரின் கடுமையான ஆதரவாளன் அவன். பேச்சு விவாதமாக மாறி இறுதியில் வாக்குவாதமாக மாறிய போது அவன் கடைசியாகச் சொன்னான் " முட்டாளே, ஐம்பதாண்டுகளுக்குள் இந்த முழு நாடுமே முஸ்லீம் நாடாகப் போகிறது. என்னைப்போலவே நீயும் தெருவில் தான் பிச்சையெடுக்கப் போகிறாய்" நான் அவனை இடைமறித்துக் கத்தினேன் "அட முட்டாள் மனிதா, ஐம்பதாண்டுகளுக்குப் பின் நீ நின்று பேசும் இந்த நிலம் கடலுக்குள் இருக்கப்போகிறது. குடிநீருக்கும் சுத்தமான காற்றுக்கும் அல்லாடிக் கொண்டிருக்கப் போகிறாய். உன் மொத்தப் பரம்பரையே நாசமாகப் போகிறது. நீயும் உன் குடும்பமும் கொத்துக் கொத்தாய் செத்து விழும் போது இந்த நாட்டை ஆள்வது எந்த இனம் என்று யோசித்துக் கொண்டிருக்கவா உனக்கு நேரம் இருக்கும்?"



எதிர்காலத்தைக் கணிப்பது எப்போதுமே இந்தக் கோணத்தில் மட்டும் தான் நம்மிடம் இருக்கிறது. அந்த இனம் அப்படி இருக்கும். இந்த மதம் இப்படி இருக்கும். அந்த மொழி அப்படி இருக்கும். இந்த ஊர் இப்படி இருக்கும். அதற்கெல்லாம் வெளியே நாம் கொஞ்சமும் யோசித்துப் பார்ப்பதில்லை. வெறுமனே உணர்ச்சி சார்ந்த மதமும் இனமும் மொழியும் பிரதேசமும் மட்டுமே நம் விவாதங்களுக்குப் போதுமானவையாக இருக்கின்றன. இவற்றில் மட்டுமே நாம் திருப்தியடைந்துவிட்டு, அடுத்த வேலையைப் பார்க்கச் சென்று விடுகிறோம்.

நாம் மனிதர்கள். நமக்கென்று ஒரு சமூகப் பொறுப்பு இருக்கவேண்டும், நம் எதிர்காலம் குறித்தும் நம் சந்ததியினரின் எதிர்காலம் குறித்தும் அக்கறை இருக்கவேண்டும், சிறிய நுண் அடையாளங்களுக்கு மேலாக பெரிய அடையாளங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து மேம்படவேண்டும் என்றெல்லாம் நாம் சிந்திப்பதில்லை.

இலங்கை இரண்டு கோடி சனத்தொகையுடன் மூவினங்கள் வாழும் நாடு. ஏழுக்கு மூன்று என்ற ரீதியில் ஒரு அதீத பெரும்பான்மையும் இரு சிறுபான்மைகளும் வாழ்கின்றன. கணக்கே எடுக்கப்படாத சிறிய இனங்கள் வேறு கதை. 1948இல் சுதந்திரமடைந்து 71 ஆண்டுகள். முப்பதாண்டு நீடித்த உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து பத்தாண்டுகள் ஆகிவிட்டன. இனமுரண்பாடு பல்வேறு பரிணாமங்களை எடுத்திருக்கிறது. ஒரு நாடாக பொருளாதார ரீதியில் இலங்கை வெற்றிபெறவில்லை, உலகை ஆட்டிப்படைக்கும் தீவிரவாதம் நாட்டுக்குள் நுழைந்து பெரும் அனர்த்தத்தை நடாத்திச் சென்றிருக்கிறது. இந்தப் பின்னணியில் இடம்பெறுகின்ற ஒரு ஜனாதிபதித் தேர்தலில் நாம் எந்தெந்த விடயங்களில் தான் உண்மையில் கவனம் செலுத்தவேண்டும்?

"எப்படி வாழவிரும்புகிறீர்கள்? ஒரு சொல்லில் பதில் சொல்லுங்கள்" என்ற கேள்விக்கு நம்மில் 95 வீதமானோரின் பதில் "மகிழ்ச்சியாக" என்பது மட்டும் தான். ஆறு மாதங்களுக்கு முன்பு உயிர்த்த ஞாயிறு படுகொலை இடம்பெற்றதற்குப் பிந்தைய நாட்களை எப்படிக் கழித்தோம் என்பது நினைவிருக்கிறதா? எப்படியாவது பழைய நிலைமைக்கு திரும்பி விட வேண்டும், எப்படியாவது நிலைமை சுமுகமாகிவிட வேண்டும் என்று எப்படி இன - மத பேதமில்லாமல் ஒவ்வொருவரும் பிரார்த்திக் கொண்டிருந்தோம்? அனர்த்தம் நேரும் போது மட்டுமல்ல; எதிர்காலம் என்னும் போது நாம் எதிர்பார்க்கும் முதன்மையான அம்சமே அது தான். இயல்பான வாழ்க்கை. இங்கு இயல்பு என்ற சொல்லின் பொருள் மகிழ்ச்சி.

இலங்கையில் தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் பல இருக்கின்றன. மிக முக்கியமானவை என்று மூன்றைச் சொல்லலாம். இனமுரண்பாடு, பொருளாதாரப் பிரச்சினைகள், சுற்றாடல் பிரச்சினைகள். இந்த மூன்றுக்கும் - தற்காலிகமாகவேனும் - யார் தீர்வு வைத்திருக்கிறாரோ, அல்லது மிகக்குறைந்த அளவிலேனும் எதிர்பார்ப்புகளை யார் பூர்த்தி செய்கிறாரோ அவரை தெரிவு செய்வதே காலத்துக்குத் தேவையானது.

உண்மையில் முதலாவது இனமுரண்பாடு தீர்க்கப்பட்டாலே ஏனைய இரண்டு பிரச்சினைகளையும் வெகு எளிதாகத் தீர்த்துவிடலாம். ஆனால் இனமுரண்பாட்டைத் தீர்ப்பது அத்தனை எளிய காரியம் அல்ல. எடுத்தேன் கவிழ்த்தேன் என்று இன்று முடிவெடுத்து நாளை தீர்க்கக்கூடிய எளிமையான சிக்கலும் அல்ல அது. இனமுரண்பாட்டைத் தீர்ப்போம் என்று நீண்டகாலத்துக்குத் திட்டமிட்டாலும், படிப்படியாக நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் பரப்பி சமூக ஒன்றிப்பை உறுதிப்படுத்துவதற்கு குறைந்தது பத்து ஆண்டுகள் தேவை. அதைச் செய்யவேண்டியது பெரும்பான்மை. "பயப்படாதீர்கள். உங்களைப் பாதுகாப்பது எங்கள் பொறுப்பு" என்ற நம்பிக்கையை சிறுபான்மையினர் மத்தியில் பெரும்பான்மை விதைத்தாலே அடிப்படைவாதங்களை அடியோடு துடைத்தெறிந்து விடலாம். அதைப் பெரும்பான்மை செய்யாது, செய்யவும் போவதில்லை, இயற்கையும் அது தான்.

எனவே நடப்பது நடக்கட்டும். உரிய காலத்தில் இந்தப் புரிந்துணர்வு இயல்பாக அடையப்படட்டும் என்று காலத்தின் தலையில் பொறுப்பைப் போட்டுவிட்டு ஆகவேண்டியதைப் பார்ப்பதே சிந்திக்கும் திறனுள்ள இலங்கைக் குடிமகன் ஒவ்வொருவனதும் கடப்பாடு. 'சிந்திக்கும் திறனுள்ள' என்பதை அழுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் படித்தவர்கள் எல்லோருமே சிந்திக்கும் திறன் கொண்டவர்கள் அல்ல. வைத்தியர், பொறியியலாளர், சட்ட அறிஞர் என்று பெரிய தொழில்களில் ஈடுபடுபவர்களுக்குத் தெரியும். அங்கெல்லாம் இருப்பது போல இனவெறியர்களை, மூடப்பிற்போக்குவாதிகளை ஒரு சாதாரண பாமரக் குடியானவனிடம் நீங்கள் காணவே மாட்டீர்கள்.

இரண்டாவது பாரிய பிரச்சினை பொருளாதாரச் சிக்கல். 2019ஆம் ஆண்டுக்கான உலக வங்கியின் பட்டியலில், இலங்கை "மேல்வகுப்பு நடுத்தர வருமான நாடாக" தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. இதுவரை அது "கீழ்வகுப்பு நடுத்தர வருமான நாடாக" பட்டியலிடப்பட்டிருந்தது. ஒரு இலங்கையரின் தலா வருமானத்தைக் கணக்கிட்டே இந்தப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. தலா வருமானம் 3950 அமெரிக்க டொலருக்குக் கூடினால் அந்த நாடு நடுத்தர வருமானத்தின் மேல்வகுப்பைச் சேரும். இந்த ஆண்டு இலங்கையில் அந்தப் பெறுமானம், 4,060 அமெரிக்க டொலராக அதிகரித்திருப்பதால் இந்தத் தரமுயர்வு இடம்பெற்றிருக்கிறது.

**குடவோலையார்**

ஆனால் இது சவாலுக்குரிய குறிகாட்டியும் கூட. இந்த அடைவின் காரணமாக உலக சந்தையில் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த பல சலுகைகள், வரி விலக்குகள், கடனுதவிகள் கிடைக்காமல் போக வாய்ப்பு உள்ளது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சியும் அத்தனை மகிழ்ச்சிப்படும்படி இல்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின், இலங்கைக்குரிய நம்பிக்கைக்குரிய வருமான வழியான உல்லாசப் பயணத்துறையும் பெருமளவு வீழ்ச்சி கண்டிருக்கிறது.

முதலீட்டாளர்கள் இலங்கையை நம்பிப் பணத்தைப் போடவும் தயாராக இல்லை. கைத்தொழில் துறைகளும் அரச கம்பனிகளும் என்றுமில்லாதவாறு நட்டத்தில் இயங்குகின்றன. இந்து சமுத்திரத்தின் மத்தியில் இலங்கை இருக்கிறது என்பது எத்தனை சாதகமான புவியியல் அமைப்பு என்பதை வரலாற்றுப் பாடத்தில் படித்திருப்போம். சந்தர்ப்பத்தைப் பார்த்துக் கொத்திக்கொண்டு போக சீனா, அமெரிக்கா, இந்தியா முதலிய வல்லரசுகள் கழுகுக்கண்ணுடன் இலங்கையை உற்றுநோக்கிக் கொண்டிருக்கின்றன.

சுற்றாடல் பிரச்சினைகள் இன்னொரு ரீதியில் கவனிக்கவேண்டியவை. 2019ஆம் ஆண்டுக்கான காலநிலை இடர்ச் சுட்டெண்ணில் இலங்கை இரண்டாமிடத்தைப் பெற்றிருக்கிறது. காலநிலை மாற்றத்தால் எந்தெந்த நாடுகள் அதிகம் பாதிக்கப்படும் என்பதை மதிப்பிடும் சர்வதேச தரவரிசைப் பட்டியல் இது. என்றுமில்லாதவாறு கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக வெள்ளப்பெருக்கு, மண்சரிவு முதலிய அனர்த்தங்கள் இலங்கையில் அதிகரித்து வருவதை நாமே கண்கூடாகப் பார்க்கிறோம். இது ஒருபுறம் போக, திண்மக் கழிவகற்றல், திட்டமிடப்படாத அபிவிருத்தி முதலியன இன்னொரு பக்கம் அச்சுறுத்தலாக வளர்ந்து வருகின்றன.

இந்தத் தேர்தலில் நாம் வெற்றிபெறச் செய்கின்ற ஜனாதிபதி வேட்பாளர் இந்த மூன்று பிரச்சினைகளையும் தீர்ப்பவராக இருக்கவேண்டும், தீர்க்கமுடியாதவர் என்றால் சரியான சட்டதிட்டங்களை, அரசியல் வியூகங்களை மேற்கொண்டு இயன்றவரை குறைக்கக் கூடியவராக இருக்கவேண்டும். அதுவும் இல்லையா, கூட்டுபவர் என்றாலும், சரி தொலையட்டும், மிகக்குறைந்த அளவே கூட்டுபவராக இருக்கவேண்டும். அதை விடுத்து, அரசியல் லாபங்களுக்காக இனவாதத் தீயை மூட்டுபவர்களை, பொருளாதாரக் காரணங்களுக்காக நாட்டை அடமானம் வைக்கக்கூடியவர்களை, சுற்றாடல் விடயத்தில் கிஞ்சித்தும் கவலை இல்லாதவர்களை தேர்ந்தெடுப்பது முட்டாள்தனமான காரியம். எதிர்காலம் பற்றி சிந்திக்காமல் வெறுமனே உணர்ச்சி வசப்படக்கூடிய இனவாதத்துக்குள் வீழ்ந்தோமென்றால், நாம் மண்ணள்ளிக் கொட்டுவது நம் தலையில் மட்டுமல்ல; நம் எதிர்காலங்கள் பிறக்கப்போகின்ற அன்னையரின் கருவறையிலும் தான். அதுபோலக் கொடுமையான சாபம் வேறொன்றுமில்லை.

(இந்தக் கட்டுரையை எழுதி முடித்ததும் நண்பரொருவரிடம் காட்டினேன். 'இந்தக் கட்டுரையை எந்த மொழியில் எழுதியிருக்கவேண்டும் என்று தெரியாதா உனக்கு?' என்று கேட்டார். நான் புன்னகைத்தேன் "இது உண்மையில் எனக்கு நானே சொல்லிக்கொண்டது. அதனால் ஆகப்போவது ஒன்றுமில்லை தான். ஆனால் நாம் நினைப்பதை விட மக்கள் புத்திசாலிகள்" என்றேன். "ஆம். எலெக்சனில் தெரியும்".)

## படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:

" அலையப்போடி நல்லரெத்தினம் (ஸ்தாபகர்)
அறிவாலயம் அறக்கட்டளை நிதியம்
பண்டாரியாவெளி கொக்கட்டிச்சோலை "

# மண்முனைப்பால வீதிக்கு முறையான திட்டம் எப்போது?



'மாரி மழை தொடங்கினா மண்முனை வீதியையும், பாலத்தடியும் கடக்கிற எண்டா சரியான கஸ்டந்தான்' என தம்பிப்பிள்ளை, குஞ்சிதம்பியுடன் பேசிக்கொண்டிருந்தான். தாழங்குவிடாவிலிருந்து வந்த தம்பிப்பிள்ளை அதிகமழை பெய்ய படுவான்கரைப்பக்கமாக இருக்கின்ற தரிப்பிடத்தில் நுழைந்து கொண்டான். கொக்கட்டிச்சோலை பக்கமாவிருந்து வந்த குஞ்சித்தம்பியும் அதற்குள் நுழைந்து கொண்டார். இருவரும் தலையையும், உடுப்பையும் தட்டிக்கொண்டனர்.

அப்போதுதான் தம்பிப்பிள்ளையும் ஏதோ முணுமுணுத்தான். முணுமுணுத்தது குஞ்சித்தம்பிக்கு விளங்கியும், விளங்காமலும் இருக்க. என்ன தம்பிப்பிள்ளை முணுமுணுக்கிற என குஞ்சித்தம்பி கூற. தம்பிப்பிள்ளையும் ஆரம்பித்தான்.

'என்னத்தசொல்லுற, முன்னமெல்லாம், எழுவான்கரைக்கு போக்குவரத்து செய்யணுமெண்ட இந்த இடத்தில வந்து இருப்போம். "பாதை" (படகு) வந்ததும் அடிச்சிப்பிடித்து ஏறுவோம். தண்ணீரில நனைந்து பாதையில ஏறவேணும். தட்டியிலும் நிற்கவேண்டி வரும். முன்பின் அனுபவம் இல்லாவிட்டால் வாகனத்தை ஏற்றமுடியாது. பாதை கரையை தட்டும்போது உறுதியாக நிற்க வேணும். இல்லாவிட்டால் முன்னுக்கு நிற்பவர்மேல் முட்டிவிடுவோம். அல்லது விழுந்து விடுவோம். மழை பெய்தா, காற்றுவீசினா இயந்திரமும் இயங்கவில்லையெண்டா ஆற்றிலே எங்கையோ பாதை கொண்டு கரைசேர்க்கும். மாரிகாலம் பெரும்கஸ்டம் அதெல்லாம் சொல்லியும் விளக்கமுடியாது. பட்டவனுக்குதான் தெரியும். பலரும் இறந்தும் இருக்கின்றனர். இந்த கஸ்டங்களையெல்லாம் நீக்க மண்முனைப் பாலத்தினை அமைத்து திறந்து வைத்தார்கள். இதனால் நினைத்த நேரம் விரும்பிய இடங்களுக்கு சென்று வருகின்றனர். எவ்வளவோ கஸ்டப்பட்ட மக்களுக்கு பாலம் கிடைத்தமை பெரும் வசதி வாய்ப்புத்தான்' என தம்பிப்பிள்ளை பேசிக்கொண்டான்.

அதைக்கேட்டுக்கொண்டிருந்த குஞ்சிதம்பி, நிறைய துன்பங்களை பாதையிருந்த காலத்தில் அனுபவித்திருக்கின்றோம். அதைவிட இப்;போது இவ்வீதியின் போக்குவரத்தில் குறையத்தான் வலிகளை எதிர்கொள்கின்றோம். ஆனாலும் மற்றைய இடங்களின் அபிவிருத்திகளையும், வீதி அமைப்பினையும் பார்க்கின்ற போது, நாம் அதிகமாகத்தான் துன்பங்களை எதிர்கொள்கின்றோம் என்றான்.

மண்முனை பாலம் அமைத்ததில் இருந்து இன்றுவரை மகிழடித்தீவு சந்தியில் இருந்து மண்முனைப் பாலம் வரை உள்ள வீதிக்கு பலதடவை திருத்தல் வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக காபட் வீதியில் மடு ஏற்படுவதும் பின் அதை நிரப்புவதுமே வேலையாகிவிட்டது. இப்போதும் இவ்வீதியில் பல இடங்களில் பள்ளங்கள் காணப்படுகின்றன. அதில் நீர் நிரப்பியிருக்கின்றது. இதன் காரணமாக இவ்வீதியில் போக்குவரத்து செய்யும் மக்கள் விபத்துக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மழைக் காலங்களில் இவ்வீதி வெள்ளநீரால் மூடப்படுவதுமுண்டு. மகிழடித்தீவு சந்தியில் இருந்து மண்முனை வரை படகுச்சேவைகளும் நடைபெறுவதும் உண்டு. இருபக்கமும், ஆறும் நடுவில் வீதியும் இருப்பதினால் இவ்வீதியினூடான போக்குவரத்து தடைப்படுவதுண்டு. வீதி பதிவாக உள்ளமையினாலும் விரைவாக நீரில் மூழ்கிவிடுகிறது.

பாலம் உயரமாகவிருந்தாலும் பாலத்தின் இரு கரைகளிலும் ஆற்றுநீர் நிரம்புவதுண்டு, அதிலும் எழுவான்கரைப்பக்கமாக அதிகளவு நீர் வீதியின்மேலால் பாய்வதுண்டு. குறிப்பாக மூன்று அடிக்கு மேல் நீர் நிரம்பி காணப்பட்ட வரலாறுகளும் உண்டு.

வீதியின் அரைவாசி பகுதிக்கு கொங்கிறீட் இடப்பட்டும் எஞ்சிய பகுதிக்கு இடப்படாமலும் உள்ளது. இதனால் ஒருபகுதி உயரமாகவும், மறுபகுதி பள்ளமாகவும் காட்சியளிக்கின்றது.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக மழையும் பெய்து கொண்டிருக்கின்றது. இதனால் தாழ்நிலபகுதியில் நீர் தேங்கி உள்ளது. ஆற்றையண்டிய பகுதியிலேயே நீர் அதிகம் காணப்படுகின்றது. தொடர்ச்சியாக மழை இடைவிடாது பெய்தால் மண்முனை பாலத்தின் எழுவான்கரைப் பகுதியில் நீர் நிரம்புவதற்கு சாத்தியமுள்ளது. அவ்வாறு நீர் நிரம்பினால் தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற கொங்கிறீட் வீதி நீரில் மூழ்கும். அவ்வாறு நீரில் மூழ்கினால் பள்ளம் மேடுகளை இனங்காணமுடியாது போகும்.

**படுவான் பாலகன்**

இவ்வீதியின் ஊடாக போக்குவரத்துச் செய்யும் மக்கள் விபத்துக்களுக்கு உள்ளாக நேரிடலாம். மோட்டார் சைக்கிளில் அல்லது முச்சக்கரவண்டி, துவிச்சக்கரவண்டி ஆகியவற்றில் பயணம் செய்பவர்களே அதிகம் பாதிப்படைவதற்கு வாய்ப்புண்டு. நடுப்பகுதியில் உயரமும், பள்ளமுமாக இருப்பதனால் உயரத்திலிருந்து பள்ளத்திற்கு சறுக்குவதற்கு வாய்ப்புள்ளது. அதேபோல பள்ளத்திலிருந்து உயரத்தில் முட்டி விழுவதற்கும் சந்தர்ப்பமாகலாம். அல்லது முச்சக்கரவண்டிகள் போன்ற வாகனங்கள் விழுவதற்கும் வாய்ப்புள்ளது. இவ்வாறான விபத்துக்களை தவிர்ப்பதற்கு உடனடியாக வீதியின் திருத்தல் பணிகளை முன்னெடுக்க வேண்டும். அல்லது அதற்கான மாற்றுவழிகளை கையாள வேண்டும் எனக் குஞ்சித்தம்பி கூறினான்.

இதனால் இவ்வீதியினால் போக்குவரத்து செய்யும் மக்கள் வருடாந்தம் பாதிப்படைகின்றனர். வாகனங்களில் நீர் உட்புகுந்து வாகனங்கள் இயங்காமல் போவதும் நடக்கின்றது. இதற்கான தீர்வினை இன்னமும் எடுத்தாகவில்லை. காபட் வீதியில் அடிக்கடி பள்ளங்கள் ஏற்படும் நிலையில் மண்முனை பாலத்தில் இருந்து படுவான்கரைப் பக்கமாக ஆற்றின் கரைப்பகுதி வரை கொங்கிறீட் வீதி அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று எழுவான்கரைப் பகுதியிலும் அவ்வாறான வீதி சிறியளவில் அமைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றதே தவிர இன்னமும் நிறைவுறுத்தப்படவில்லை. இதனால் வருடாந்தம் மண்முனை பாலத்தின் முன்பகுதியில் உள்ள வீதியின் மேலால் நீர் பாய்ந்து போக்குவரத்து தடைப்படுவதனை இல்லாமல் செய்வதற்கான செயற்றிட்டத்தினையும் வகுத்து செயற்படுத்துவதற்கு அதிகாரிகள் முன்வரவேண்டும் என கூறினார் தம்பிப்பிள்ளை. மழையும் நிற்க அவ்விடத்தினைவிட்டு இருவரும் இருகரைகளை நோக்கி சென்றனர்.



# அக்கினி புலையவெளி
## உணவு உற்பத்திப் பொருட்கள்
### சைவ முறையில் தயாரிக்கப்பட்டது

AGNI PULAYAVELY INDUSTRIES

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர் ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி இல:- 0771516203**

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு

## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

1 கிலோ 400ரூபாய்



## மிக்சர்

1 கிலோ 400ரூபாய்



எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

# விளையாட்டு

## கிளிநொச்சி மாவட்டத்திற்கும் கோட்டைமுனை விளையாட்டுக்கழகம் உதவிக்கரம்



கோட்டைமுனை விளையாட்டு கழகம் மட்டக்களப்பு மாவட்டம் அல்லாது பிற மாவட்டங்களுக்கும் விளையாட்டு மற்றும் கல்வி ஆகிய துறைகளில் உதவி வருகின்றது.

இந்த வகையில் அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து தேசிய விளையாட்டு போட்டிகளுக்கு கலந்து கொள்ளவிருந்த 20 போட்டியாளர்களுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் முன்னிலையில் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் அங்கத்தவர்களின் நிதி உதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து தேசிய விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும் வீர வீராங்களைகளுக்கான விளையாட்டு உபகரணங்களை மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கழகம் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயத்தின் முன்னிலையில் உரியவர்களிடம் கையளித்தனர்.

இந்நிகழ்வில் கோட்டைமுனை நம்பிக்கையாளர் சபை பிரதிநிதிகளான திரு.காசிப்பிள்ளை, திரு.சிவநாதன், மூத்த உறுப்பினர் திரு.தேவராஜன் மற்றும் திரு.அருள்மொழி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பாடசாலை செல்லும் மூன்று மாணவர்களுக்கான துவிச்சக்ரவண்டிகளும் கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் நம்பிக்கையாளர் சபையின் பிரதிநிதியான



கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் திரு.காசிப்பிள்ளையால் வழங்கி வைக்கப்பட்டன.






## கிழக்குமாகாண வெண்கலப்பதக்கத்தைப் பெற்ற காரைதீவுமாணவன்.



(காரைதீவு குறூப் நிருபர் சகா)

ஸ்ரீலங்கா கராத்தே தோ கராட்டி சம்மேளனம் நடாத்திய சப்யூனியர் அணிக்கான கராட்டே சாம்பியன்சிப் போட்டியில் காரைதீவு மாணவன் சசிகரபவான் ஹிமாசலன் வெண்கலப்பதக்கம் பெற்றார்.

இப்போட்டி பட்டிருப்பு மகா வித்தியாலயத்தில் கடந்த 19ஆம் 20ஆம் திகதிகளில்(சனி ஞாயிறு) நடைபெற்றது.

13வயதுக்குட்பட்ட ஆண்போட்டியாளர்க்கான சப்யூனியர் சாம்பியன்சிப் போட்டியில் வெண்கலப்பதக்கத்தை காரைதீவுவைச்சேர்ந்த கல்முனை பற்றிமாக்கல்லூரி மாணவன் சசிகரபவான் ஹிமாசலன் பெற்று சாதனைபடைத்தார்.

மேற்படி சங்கத்தின் கிழக்குமாகாணச் செயலாளர் எஸ்.மனோகரன் சான்றிதழ்யும் வெற்றிச்சின்னத்தையும் வழங்கிவைத்தார்.

## கே.எஸ்.ஸி கிரிக்கட்அணிக்கு புதிய ஜேர்சி அறிமுகம் !



(காரைதீவு நிருபர் சகா)

காரைதீவு விளையாட்டுக்கிழகத்தின் கிரிகட் அணிக்கான புதிய ஜேர்சி அறிமுக நிகழ்வு நேற்று கழகத்தலைவர் எல்.சுரேஸ் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

காரைதீவு விளையாட்டுக்கழக தலைமை காரியாலயத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் அதிதிகளாக கழக போசகர்களான வி.ராஜேந்திரன் மற்றும் வி.ரி. சகாதேவராஜா கழக சிரேஷ்ட உறுப்பினர் கனிஷ்ட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கிரிகட் அணிக்காக புதிய ஜேர்சியை அன்பளிப்பு செய்த கழகத்தின் சிரேஸ்ட உறுப்பினர் T. தயாகரன்(கட்டார்) அங்கு நன்றிகூறி பாராட்டப்பட்டார்.

புதிய சீருடைகளைப்பெற்ற கிரிக்கட் அணியினர் புதிய உத்வேகத்துடன் உற்சாகத்துடன் விளையாடி கடந்தகாலங்களைவிட மேலும் சாதனைகளை கழகத்திற்கு பெருமைகளைச்சேர்க்கவேண்டுமென அதிதிகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

# ஜே.வி.பி.யின் சுயவிமர்சன மரபு! தோழர் சந்திரசேகருக்கு ஓர் எதிர்வினை



## பட்டறிவு

ஜே.வி.பியும் பிக்கு அரசியலும்” என்கிற தலைப்பில் சென்றவாரம் நான் எழுதிய கட்டுரை குறித்து ஜே.வி.பி.யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் சந்திரசேகர் எனது முகநூலில் ஒரு பதிவை இட்டிருந்தார்.

“நன்றி சரா.... உங்களது கட்டுரை வலதுசாரிகளுக்கு என்று கூறி இடதுசாரிகள் மீதான விமர்சனமே மேலோங்கியுள்ளது தொடர்ச்சியாக பல வருடங்களாக நான் உங்களை அவதானித்து வருகிறேன் உங்களது கட்டுரை எந்தவகையிலும் ஜே.வி.வியின் வளாச்சிக்கு உதவப்போவதில்லை. என்பதே எனது நிலைப்பாடு. ஏனென்றால் உங்களை பற்றியும் உங்களின் அரசியல் சித்தாந்தம் பற்றியும் எனக்கு ஓரளவு தெரியும். அது உங்களுக்கும் நன்குத் தெரியும். அதாவது ஜே.வி.பி ஏதோ ஒரு வகையில் மகக்ள் மத்தியில் தனது நம்பிக்கையை கட்டியெழுப்பி வருகின்றபோது உங்களை போன்றவர்களின் இவ்வகையான கட்டுரைகள் (நீங்கள் மட்டுமல்ல) அந்த நம்பிக்கையை சிதைப்பதற்கே உதவியிருக்கின்றன. மக்களின் நம்பிக்கையை சிதைப்பதற்காகவே எழுதப்படுகிறதா? என்பதே உங்களை போன்றவர்களின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன என்பதே எனது கருத்து... நன்றி உங்களின் விமர்சனப் பணிகள் தொடரட்டும்...”

என்கிறார் அவர். இந்த நேரத்தில் இப்படியானதொரு விவாதத்துக்கு நான் இழுக்கப்பட்டதற்கு வருந்துகிறேன்.

இன்றைய அரசியல் களத்தில் ஜே.வி.பி “பிரதான – மரபான – தேசிய கட்சிகளுக்கு” சிறந்த மாற்றாக இருக்கிறது என்பதை இங்கு பதிவு செய்துகொண்டு இதற்காண தார்மீக பதிலை அளிப்பது நமது கடமை. ஜே.வி.பி.யை ஆதரிப்பவர்களை விமர்சனமின்றி ஆதரிக்க வேண்டும் என்கிற நிபந்தனையை எதிர்பார்ப்பது மார்க்சிய தார்மீகம் அல்ல.

என்னை விளிக்கும் போது “சரா” என்று விளித்தத்தைக் கவனித்தேன். உங்களை முதன் முதல் அன்றைய “கம்லத் தோழர்” (இன்றைய விமல் வீரன்ச) கொழும்பு போது நூலகத்தில் வைத்து அறிமுகம் செய்து வைத்தபோது ரமேஸ் என்றே அறிமுகப்படுத்தியது இன்றும் ஞாபகம். அதன் பின்னர் நாம் இருவரும் நமக்கு இடையில் தனிப்பட்ட நண்பர்களாகவும், நெருங்கிய குடும்ப நண்பர்களாகவும் ஆனோம். தோழர் என்றே பரஸ்பரம் நாம் ஒருவரையொருவர் விளித்துக்கொள்வோம். ஆனால் எப்போதெல்லாம் நாம் அரசியல் விவாதம் செய்கிறோமோ; அந்த விவாதம் சூடு பிடிக்கும்போது உங்களுக்கு நான் “சரா” வாக ஆகிவிடுகிறேன். நீங்கள் முன்வைக்கும் கருத்துக்களை மாக்சிய திரிபு என்று என்று வியாக்கியானப்படுத்தி “ரமேஸ்” என்று தொடர்ந்து அழைத்திருக்க முடியும். ஆனால் எனக்கு அரசியல் சகிப்புத் தன்மை உண்டு தோழர். விமர்சனத்தை விமர்சனமாக எதிர்கொள்ளாமல் போகுமளவுக்கு நான் அரசியல் வரட்சியடையவில்லை. அதனால் தான் இந்த பதிலும்.

ஆனால் நீங்களோ “உங்களைப் பற்றி எனக்குத் தெரியும்” என்கிற பாணியில் ஒரு சதிகாரனை சுட்டுவது போல கருத்து கூறியிருக்கிறீர்கள். பல சந்தர்ப்பங்களில் உங்களுக்கும் எனக்கும் இடையிலான அரசியல் உரையாடல் கடும் விவாதமாக மாறியிருக்கின்றன. ஆனால் நாகரிகமாகவே நடந்திருக்கிறது என்பது ஆறுதல்.

என்னால் அன்று தொடக்கம் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கு உரிய பதில் கிடைப்பதற்குப் பதில் வெறும் அர்த்தமற்ற இழுபறி விளக்கங்களாகத் தான் அவை இருந்திருக்கின்றன. தேவைப்பட்டால் நாம் விவாதித்த விடயங்கள் குறித்து எனது நினைவில் உள்ளவற்றை வேறு ஒரு பதிவில் விளக்க முடியும். எனது சிக்கல் என்னவென்றால் அன்று நான் முன்வைத்த அந்த விமர்சனங்கள் இன்றும் செல்லுபடியானவை. என்பது தான். தேசிய இனப்பிரச்சினையை அணுகும் விதம் குறித்த அடிப்படை விவாதங்கள் அவை.

### இடதுசாரிய விமர்சன மரபு

இலங்கையின் வரலாற்றில் இதுவரை பிரதான தேசிய வலதுசாரிக் கட்சிகள் காலம் நெடுகிலும் சந்தித்த பிளவுகளை விட அளவில் அதிகமானவை இடதுசாரிக் கட்சிகள் கண்ட பிளவுகள். வலதுசாரிக் கட்சிகள் பெரும்பாலும் கோட்பாடுகளிலும், விதிகளிலும் தங்கியிருப்பதில்லை. இடதுசாரிக்கட்சிகள் அப்படியல்ல கட்சியின் முழு நடத்தையும் கோட்பாட்டில் தங்கியிருப்பவை. எனவே கோட்பாட்டு விவாதம் எனும் பேரில் பிளவுகளையே அளவுக்கு அதிகமாக சந்தித்து இன்று பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகள் சின்னாபின்னமாகி, அழிந்து நாசமாகப் போய் விட்டன.

ஜனநாயக மத்தியத்துவத்துக்கும், விமர்சனம் – சுயவிமர்சனத்துக்கு போதிய வாய்ப்புகளும் இக்கட்சிகளில் இடம் இருந்திருந்தால் பெரும்பாலான பிளவுகளை தவிர்த்திருக்க முடியும். பல சந்தர்ப்பங்களில் விமர்சனங்கள் தனிப்பட்ட தாக்குதல்களில் போய் முடிந்திருக்கின்றன.

90களின் ஆரம்பத்தில் ஜே.வி.பி மீள உயிர்க்க காரணமாக இருந்தவர்கள் ஹிரு குழுவினர். தேசிய இனப்பிரச்சினை, சுயநிர்ணய உரிமை குறித்த விவாதம் மீண்டும் கட்சிக்குள் தலைதூக்கியபோது கட்சிக்குள் இனவாதத்தின் செல்வாக்கும் மேலெழுந்தது. அப்போது ஹிரு பத்திரிகையின் முக்கிய ஆசிரியராக இருந்த ரோஹித்த பாஷன “தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையின்” அவசியத்தை வலியுறுத்தியதற்காக அவரை “பொம்பிள பக்கத்துக்கு இழுக்கிறான்” என்று தனிப்பட்ட ரீதியில் அசிங்கப்படுத்தப்பட்டார். (அவரின் காதலி ஒரு தமிழ் பின்னணியைக் கொண்டவர்.). 90களின் நடுப்பகுதியில் ஜே.வி.பியை விட்டு வெளியேறியோர் வெளியில் இருந்து தோழமைபூர்வமான விமர்சனங்களை வைத்து துண்டுபிரசுரங்கள் விநியோகித்தர்வகளை ஜே.வி.பி வன்முறையால் தான் எதிர்கொண்டது. அதற்கு நானும் சாட்சியாக இருக்கிறேன்.



சுனிலா அபேசேகர (மகளிர் பிரிவு செயற்பாட்டாளரும், “விடுதலை கீதம்” குழுவின் பாடகியும்), கெலி சேனநாயக்க (அன்றைய பொதுச்செயலாளர்) போன்றோர் கட்சிக்குள் கோட்பாட்டுப் விவாதத்தில் ஈடுபட்டிருந்த காலப்பகுதியில் அவர்களுக்கு இடையிலான தனிப்பட்ட காதலை அசிங்கப்படுத்தி அரசியல் விவாதத்தை காயடித்ததன் விளைவு அவர்கள் இறுதியில் கட்சியை விட்டு வெளியேறினார்கள். பின்னர் வெளியேற்றப்பட்டதாகக் ஜே.வி.பி கூறிக்கொண்டது.

முக்கியமாக ஜே.வி.பி.யின் வரலாற்றில் சகிப்பற்றதன்மைக்கும், சுவிமர்சனங்களை அவதூறுகளாலும், வன்முறைகளாலும் பதில் கொடுத்த மரபுக்கு ஒரு தொகை சம்பவங்களைப் பட்டியலிட முடியும்.
புரட்சிகர கட்சியொன்று விமர்சனங்களுக்கு ஏன் பயப்படவேண்டும். மாஓ சேதுங் இப்படி கூறுகிறார்

விமர்சனத்தைப் பொறுத்தவரை அதனை உரிய சமயத்தில் செய்யுங்கள். எல்லாம் முடிந்த பின்னர் விமர்சிக்கும் போக்கைக் கைவிடுங்கள்.

On the Question of Agricultural Co-operation (July 31, 1955), 3rd ed., p. 25.

லெனின் இப்படி விளக்குகிறார்.

“ஒரு தவறை வெளிப்படையாக ஒப்புக் கொள்வது அதைச் செய்வதற்குக் காரணமாக இருந்த நிலைமைகளைப் பகுப்பாய்வு செய்வது, அதைச் சரி செய்வதற்கான வழிமுறைகளைத் தீர ஆராய்வது – இவையெல்லாம் ஒரு தீவிரமான கட்சிக்குரிய அடையாளமாகும் (லெ. தொ. நூ. 31.57)

### சிங்கள இடதுசாரிக் கட்சிகளாக

இலங்கையின் இடதுசாரி இயக்கங்கள் இலங்கையில் சிங்கள மொழியில் தான் இயங்கியிருகின்றன. விதிவிலக்குகளை தவிர்த்துப் பார்த்தால். கூட்டப் பேச்சுகள், உட் கட்சி விவாதங்கள் செயற்பாடுகள், போஸ்டர்கள், பிரசுரங்கள், வெளியீடுகள், ஊடகங்கள், இன்றைய இணையத்தளங்கள் வரை அனைத்துமே சிங்களத்தில் மட்டும் தான் வெளியிடப்படுவந்திருகின்றன. விதிவிலக்காக சிலவற்றை காண்பித்து தமிழில் இதோ வெளியிட்டிருக்கிறோமே என்று வாதிடலாம். இலங்கையின் அனைத்து இடதுசாரிக் கட்சிகளும் அப்படித்தான் பதிலளித்து வந்துள்ளன. ஒரு ‘பாட்டாளி வர்க்கக் கட்சி” எப்படி “சிங்களப் பாட்டாளிவர்க்க கட்சி”யாக சுருங்க முடியும் என்கிற கேள்விக்கு எவரும் பதிலளிப்பதில்லை. பதிலளித்ததுமில்லை.

அப்படியிருக்கும்போது அக்கட்சிகளை அறிவதற்கும், கணிப்பதற்கும், விமர்சிப்பதற்குமான வாய்ப்புகள் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கியதில்லை என்று தான் நான் கூற முடியும். ஜே.வி.பி.யும் இதில் விதிவிலக்கில்லை.

சிங்களமும் தெரிந்த, இடது சாரி இயக்கங்களோடு செயற்பட்ட, அந்த அரசியலை விளங்கிக்கொண்ட என் போன்றோர் மட்டுமே இதனை அணுக எஞ்சியிருக்கிறோம். எனவே தான் ஜே.வி.பியையும் பல சந்தர்ப்பங்களில் ஆதரித்து இயங்கினாலும் தேவையான இடங்களில் தமிழில் விமர்சனங்களையும் செய்ய பின் நின்றதில்லை. சிங்களச் சூழலில் ஜே.விபி.யின் மீதான இடதுசாரி அனுகுமுறையுடனான விமர்சனங்கள்

என்.சரவணன்

பல நூல்களாகவே வெளிவந்துள்ளன. தமிழில் இத்தகையை விமர்சனங்கள் உங்களுக்குப் புதிதாக இருக்கலாம். எனவே எனது விமர்சனங்களையும் எதிரிகளின் விமர்சனங்களைப் போல எதிர்கொள்ளப் பார்க்கிறீர்கள் என்பதே எனது விமர்சனம். ஜே.வி.பி.யை விமர்சிக்க எதிரியின் முகாமில் இருந்தால் தான் செய்ய முடியுமா? அப்படி விமர்சிக்க எதிரியின் முகாமுக்கே போகத்தான் வேண்டுமா? அதைத்தான் ஜே.வி.பி முன்மொழிகிறதா?

வலதுசாரி, முதலாளித்துவக் கட்சிகள் குறித்து வினையாற்றும் போது நாம் அவற்றை அம்பலப்படுத்துகிறோம் எதிர்க்கிறோம். ஆனால் இடதுசாரி முகாமை அணுகும் போது நாம் தோழமைபூர்வமான விமர்சனங்களையே முன்வைக்கிறோம். அதற்கான அடிப்படைக் காரணமே மார்க்சிய விமர்சன – சுயவிமர்சன மரபின் மீதுள்ள நம்பிக்கை தான். அவ்விமர்சனங்களை சுயவிமர்சனம் செய்துகொண்டு வினையாற்றுவார்கள் என்கிற நம்பிக்கையில் தான். ஆனால் பெரும்பாலும் இது நிகழ்வதில்லை. விமர்சனம் ஒன்று வந்தவுடன் எடுத்த எடுப்பில் அவ்விமர்சனத்தை சதியாகவும், எதிராகவும் கருதும் மரபை மறுபக்கம் வளர்த்துவைத்திருக்கிறோம். அதுவே பல ஆரோக்கியமான தோழமைச் சக்திகளை புறந்தள்ளி, ஓரங்கட்டி, அந்நியப்படுத்தி, தூரவிலத்தி வைக்க காரணமாகியிருக்கிறது. ஜே.விபியும் தமது சுயவிமர்சனத்தின் சுயமரபைப் பற்றியாவது முதலில் சுயவிமர்சனம் செய்துகொள்ளும்படி பரிந்துரைக்க வேண்டியிருக்கிறது. ஜே.வபி.பி.யின் சுயவிமர்சன மரபு குறித்து ஏராளமான விமர்சனங்கள் சிங்களத்தில் வெளிவந்துள்ளன. தமிழில் அப்படி ஒரு நூல் கூட இல்லை என்பதை உறுதியாகக் கூற முடியும்.

ஜே.வி.பி.யின் அரசியல் நடத்தையில் நல்ல மாற்றங்கள் காணப்பட்டாலும் கூட முன்னைய அரசியல் நடத்தை குறித்த விமர்சனங்கள் தவிர்க்க முடியாதவை. முதலாவது விடயம் அந்த வரலாறு விமர்சன ரீதியில் தமிழிலும் பதிவு செய்யப்படவேண்டியை அவை. அடுத்தது ஜே.வி.பி. அதனை முறையாகவும் முழுமையாகயும் பகிரங்க சுயவிமர்சனத்துக்கு உள்ளாக்கி கடக்க வேண்டும். இதை அவர்களாக செய்ய முன்வராத வரை வெளிவிமர்சனங்கள் ஓயப்போவதில்லை.

# மாகோன் மகளார்

வி. துலாஞ்சனன்



வரலாற்றறிஞரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கதிராமன் தங்கேஸ்வரி அம்மையார் அவர்கள் கடந்த 26 ஒக்டோபர், 2019, சனிக்கிழமை தன் அறுபத்தேழாவது வயதில் காலமானார். இலங்கை வரலாற்றுலகில் தவிர்க்க முடியாத ஆளுமையாகத் திகழ்ந்தவர் இவர். கலிங்க மாகோன் பற்றியும் திருக்கோணமலையின் தொன்ம நாயகனான குளக்கோட்டன் பற்றியும் இவர் செய்த ஆய்வுகளே இவரை தமிழுலகுக்கு குறிப்பாக இனங்காட்டின எனலாம்.

மட்டக்களப்பு கன்னங்குடாவில் 1952ஆம் ஆண்டு கதிராமன் - திருவஞ்சனம் தம்பதியரின் மகளாகப் பிறந்த அம்மையார், அதே ஊரின் மகாவித்தியாலயம், ஆனைப்பந்தி இராமகிருஷ்ணமிஷன் பெண்கள் பாடசாலை மற்றும் மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் பாடசாலையின் பழைய மாணவி. களனிப் பல்கலைக்கழகத்தில் தொல்லியலில் பட்டம் பெற்றவர். மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தராக கடமையாற்றி வந்தார். 'விபுலானந்தரின் தொல்லியல் ஆய்வுகள்' என்பது 1982இல் வெளியான இவரது முதல் நூல். தொடர்ந்து குளக்கோட்டன் தரிசனம் (1985), மாகோன் வரலாறு (1995), கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு (2007) முதலியவை இவரது குறிப்பிடத்தக்க நூல்கள். அவற்றில் பலத்த வரவேற்பைப் பெற்ற குளக்கோட்டன் மற்றும் மாகோன் பற்றிய இரு நூல்களும் மணிமேகலைப் பிரசுரத்தால் மீள்பதிப்புக் கண்டன.

தங்கேஸ்வரி அம்மையாரின் ஆய்வு முறைமை சுவாரசியமானது. முதலில் தான் ஆய்வு செய்கின்ற ஆளுமையைக் குறிப்பிடுகின்ற எல்லா வரலாற்று இலக்கியங்களையும் தொகுத்துக்கொள்வார். பின் அந்த ஆளுமை பற்றி அந்தந்த நூல்கள் என்ன சொல்கின்றன என்று பட்டியலிடுவார். பின்பு அந்தப் பட்டியலில் எவற்றை ஏற்கவேண்டும், எவற்றை விலக்க வேண்டும், காரணம் என்னென்ன என்று தர்க்கரீதியாகச் சொல்வார். பிறகு அனைத்தையும் சுருக்கி இறுதியில் இதுதான் இவர் என்ற முடிவுக்கு வருவார். எனவே இந்த முடிவு அத்தனை இலகுவாக மறுக்க முடியாததாக இருக்கும்.

தமிழகத் தமிழரை விட இலங்கைத் தமிழருக்கு வரலாற்றுத்தேவை அத்தியாவசியமானதாக இருக்கிறது. ஒட்டுமொத்தமாகவே தமிழரிடம் தொடர்ச்சியான வரலாற்றுச் சான்றுகள் இல்லை. நீண்ட ஆவணப் பாரம்பரியம் கொண்ட சிங்களவரின் மகாவம்ச மனநிலையை வெற்றி கொள்ள, கருத்தியல் ரீதியாக, தமிழரிடம் நம்பகரமான ஆதாரம் எதுவும் இல்லை. எனவே யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல், கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் முதலான தொன்மக்கதைகளின் தொகுப்புகளே வரலாறாக முன்வைக்கப்பட்டன. கடந்த நூறாண்டில் வடகிழக்கில் எழுந்த 'வரலாற்று' நூல்கள் எல்லாமே இவற்றில் ஒன்றையோ பலவற்றையோ வழிமொழிந்து எழுந்திருப்பதை நாம் காணலாம்.

கிழக்கிலங்கையில் வரலாற்றாய்வு செய்பவர்களிடம் உள்ள முதன்மையான குறைபாடும் மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தை அல்லது மட்டக்களப்பு மான்மியத்தை அறுதியும் இறுதியுமான வரலாற்றுச் சான்றாகக் கொள்வது தான். அந்தக் கருத்தை உடைத்து முன்வந்தவர்கள் ஒரு சிலரே. அவர்களில் ஒருவர் என்று தங்கேஸ்வரி அம்மையாரைச் சொல்லலாம். இன்னின்ன காரணங்களால் இந்த இடத்தில் இதை ஏற்கலாம் என்று கூறியே அவர் மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தை மேற்கோள் காட்டுவதுண்டு. தொன்மத்துக்கும் வரலாற்றுக்கும் உள்ள வேறுபாட்டை அவர் அடிக்கடி சுட்டிக்காட்டியிருக்கிறார். "நமது ஆதாரங்களில் கதை அதிகம், வரலாறு குறைவு. கதை குறைவான, ஆனால் வரலாறு அதிகமான சான்றுகளையே நாம் உற்றுப்பார்க்கவேண்டும்" என்பது அவரது பெரும்பாலான ஆய்வுக்கட்டுரைகளில் இடம்பெறுகின்ற வரியாக இருக்கிறது.
சிங்கள அரசுகளுக்கு சிம்ம சொப்பனமாக 1215இல் படையெடுத்த வீர சைவனான கலிங்க மாகோன், விஜயபாகு என்ற




பெயரைச் சூடிக்கொண்டு அரசாண்டான், பிற்காலத்தில் அவனே வடக்கே சென்று யாழ்ப்பாண அரசை தோற்றுவித்தான் என்பதும், அவனுக்கு துணையரசனாக 'ஜயபாகு' எனப் பட்டம் சூடியிருந்த சோழகங்கதேவனே குளக்கோட்டன் என்பதும் அவரது இருபெரும் நூல்களும் சொல்லும் ஆய்வு முடிவுகள். இதற்கு இன்னோரன்ன நூல்களை அவர் ஆதாரத்துக்கு எடுத்துக்கொள்கிறார்.

இன்றைய சூழ்நிலையில் வைத்து நோக்கும் போது, அவரின் ஆய்வுகளில் சில இடங்களில் மயக்கங்கள் இருந்தாலும், அந்த இரு நூல்களும் இலங்கைத் தமிழ் ஆய்வுலகைப் பொறுத்தவரை மாபெரும் பொக்கிஷங்கள். கடந்த நூற்றாண்டில் இலங்கையில் உருவான தமிழ் வரலாற்று நூல்களில் முதன்மையானது யாழ் பல்கலைக்கழக வெளியீடான "யாழ்ப்பாண இராச்சியம்". தங்கேஸ்வரியின் நூல்கள், அதற்கு அடுத்த இரு இடங்களையும் பெற்றுக்கொள்ளத் தகுதியானவை.

இத்தனைக்கும் மாகோன் பற்றிய ஆய்வுகள் இன்னும் தொடரவேண்டும் என்ற கோரிக்கையோடே தன் மாகோன் வரலாறு நூலின் இறுதி அத்தியாயத்துக்கு "முற்றுப் பெறாத காவியம்" என்று தலைப்பிட்டிருக்கிறார் அவர். மாகோன் அப்படியே கவனிப்பாரற்றுக் கிடக்கிறான். குளக்கோட்டன் கிறிஸ்துவுக்கு முந்தையவன் என்றும் எட்டாம் நூற்றாண்டினன் என்றும் நிரூபிப்பதற்கான முயற்சிகள் இன்றைய ஈழத்து வரலாற்றுலகில் தொடர்கின்றன.

இன்றைய அரசியல் சரிநிலைகளில் நின்று, தமிழர் இலங்கையில் வாழும் காலத்தை முன்னே கொண்டு செல்லவேண்டும் என்ற கரிசனை இருப்பது சரி தான். அதற்காக வரலாற்று மாந்தர்களை அவர்கள் வாழ்ந்த காலத்திலும் மிக அதிக தூரம் முன்னே கொண்டு சென்று வைப்பதிலோ, பத்தாம் நூற்றாண்டுக்குப் பிந்தைய சோழ நாட்டு - பாண்டிய நாட்டு உறவுகளை மறைத்து அவற்றை மிகப்பழையவையாக சித்தரிப்பதிலோ எவ்வித அர்த்தமும் இல்லை. இதன் விளைவுகள் எந்த நோக்கத்துக்காக இந்த ஆய்வுகள் செய்யபப்டுகின்றனவோ அந்த நோக்கத்தை சிதறடித்து வாசகரிடத்தில் அவநம்பிக்கையை ஏற்படுத்தி விடும் என்பதை ஆய்வாளர்கள் உணர வேண்டும்.

எல்லா ஆளுமைகளுமே ஏதோ ஓரிடத்தில் காலத்திடம் தோற்கவேண்டியது கட்டாயமாக இருக்கிறது. தங்கேஸ்வரிக்கு அரசியல். 2004 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராக வந்தார். பின் 2010 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். வரலாற்று, இலக்கிய உலகோடு அவர் தொடர்பு நீங்கவில்லை எனினும் அரசியல் அவரை ஓரளவு தடுமாறச் செய்து விட்டது எனலாம்.

ஒருமுறை அவருடன் பேசிக்கொண்டிருக்கும் போது, கண்ணகி கலை இலக்கிய விழாவின் ஆய்வரங்கொன்றில் கண்ணகி வழக்குரையின் காலம் பற்றி ஒரு ஆய்வாளர் கூறிய தவறான கருத்தைப் பற்றி விவாதம் எழுந்தது. அப்போது அவர் சொன்ன கருத்தை அவர் முன்பும் சுட்டிக்காட்டியிருப்பதை அவரது நூல்களை மீள வாசிக்கும் போது உணர்ந்தேன். இது அவரது "குளக்கோட்டன் தரிசனம்" நூலின் முன்னுரையில் அவர் கூறுவது:

"வரலாற்று ஆய்வுத்துறையில் எதையும் முடிந்த முடிபாகக் கொள்வதற்கில்லை. காலப்போக்கில் வெளிவரும் பல புதிய தகவல்கள் அடிப்படையில் பல முடிவுகளை மாற்றவும், மீளாய்வு செய்யவும், ஏன் நிராகரிக்கவும் வேண்டும். உதாரணமாக இலங்கையின் பிரபல வரலாற்று ஆய்வாளர் பரணவிதான அவர்களின் பல கருத்துக்கள் இன்று நிராகரிக்கப்படுவதை வரலாற்று அறிஞர்கள் அறிவர்.

வரலாற்று ஆய்வு நூல்களில் இன்னுமொரு பெரிய ஆபத்து உள்ளது. சில வரலாற்று ஆசிரியர்கள் தாம் வரித்துக்கொண்ட கருத்துகளை இலகுவில் மாற்றிக்கொள்ளமாட்டார்கள். கிடைக்கும் தகவல்களை எல்லாம் தமது கருத்துக்கு மாற்றிக்கொள்வதற்குப் பெரும் பிரயத்தனம் செய்வார்கள். அதனால் உண்மை வரலாற்றை அறிந்துகொள்வதில் இடர்பாடுகள் ஏற்படுவது உண்டு .

(இந்நூலில்) நிறுவப்பட்ட பல உண்மைகள் அனுமானத்திலும், ஊகத்திலும், இலக்கியச் சான்றுகளின் அடிப்படையிலும் அமைந்தவை. இவற்றுக்கு மாறான சான்றுகள் கிடைக்கும் பட்சத்தில் அவை மாற்றப்பட வேண்டிவை அல்லது திருத்தப்படவேண்டியவை என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்."




மாகோன், குளக்கோட்டன் ஆகிய இருவரைப் பற்றியும் பிரக்ஞை பூர்வமான ஆய்வுகளைத் தொடக்கி வைத்து, இலங்கைத் தமிழர் வரலாற்றை புதிய திக்கில் மடைமாற்றி விட்டவர் என்ற விதத்தில் என்றென்றும் நினைவுகூரத்தக்கவர் தங்கேஸ்வரி அம்மையார்.

கிழக்கிலங்கை பற்றிய ஆய்வுகள் அறிவியல் பூர்வமாக தொடரவேண்டும் என்றே அவரும் விரும்பியிருந்தார். அவர் விரும்பிய வழியில் ஆய்வு வரன்முறைகளை மீறாமல் ஆய்வுகளைத் தொடர்வதும், அவர் சொல்வது போல வரலாற்றின் புதிய பக்கங்களை ஆதாரபூர்வமாக எழுதுவதுமே அவருக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்.

இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் மாகோனையும் குளக்கோட்டனையும் முழு ஈழவளநாடும் கொண்டாடும். அன்று அவர்களை மீட்டவர் என்ற புகழ்மாலை தங்கேஸ்வரி அம்மையாருக்கே சூட்டப்படும். வரலாறு மறைத்த ஒரு மூதாதையை மீட்ட பெருமாட்டி அவர். மாகோன் மகளாருக்கு எம் பிரியாவிடைகள்.

# அக்கரைப்பற்று : 'நாங்கள் சிரிக்கவும் சிரிக்க வைக்கவும் தெரிந்தவர்கள்'



எங்கள் ஊர் அக்கரைப்பற்றுக்கு வந்துள்ளீர்களா ?

ஒருமுறை வந்துதான் பாருங்களேன். அந்த ஊரும் நாங்களும் வித்தியாசமானவர்கள் .

நாங்கள் சிரிக்கவும், சிரிக்க வைக்கவும் தெரிந்தவர்கள்.

எங்கள் ஊர் சின்னதிலிருந்து பெருசுகள் வரை படித்தவரிலிருந்து பாமரர் வரை நாடி நரம்பெல்லாம் நகைச்சுவை தெறிக்கவே யாராவது அகப்படமாட்டார்களா என்று



வெறிகொண்டு உலாவுவோம்.

எங்கள் ஊர் குழந்தைகளைக் கூட யாரும் கலாய்த்து விட்டு தப்பிவிட முடியாது. பெரியவர்கள் தேவையில்லை குழைந்தைகளே வைத்து செய்வார்கள்.

இலங்கையின் மற்ற பகுதிகள் போல இல்லை. கடையில் வேலை செய்யும் பையன் முதலாளியையே கலாய்த்து தலைகவிழ வைப்பான் .

அதிலும் இந்த சாப்பாடு கடைகள் இருக்கிறதே… வந்தீர்களென்றால் கொத்து றொட்டியுடன் கரண்டி தருவார்களோ இல்லையோ "சம்பவம்" ஒன்றுக்கு நிச்சயம் "கெரண்டி" உண்டு.

எங்கள் ஊர் சாப்பாடு கடைகளில் சாப்பிட்டால் என்ன சாப்பிட்டதென நீங்களே போய் கவுண்டரில் சொன்னால் முதலாளி அதற்குரிய காசை பெற்றுக் கொள்வார். சிலவேளைகளில் பரிமாறிய



பையனிடம் கேட்டும் ஊர்ஜிதம் செய்து கொள்வார்.

அன்றும் அப்படித்தான்.. ஒருவர் சாப்பிட்டு முடித்து கவுண்டரில் போய் சொல்ல முதலாளி பையனை அழைத்து கேட்க பையன் சொன்னான்.

" அவர் செல்றதுதான் காச வாங்குங்குங்கோ… எண்ட வாப்போவ் உங்கள முதலாளியா வைச்சிக்கிட்டு நான் படுற பாடு…. "

முதலாளி சிரித்துக்கொண்டே தலையை குனிந்தார்.

எங்கள் ஊர் சாப்பாடு கடைகளில் சாப்பிட வருபவர்கள் எதுவும் பேசலாம் .. பரிமாறும் பையன் திருப்பி கொடுத்தானோ தாங்க மாட்டீர்கள் அது மட்டுமல்ல Peppermint Cafe காரனுக்கு ரிப்போர்ட் அடிப்பதுபோலவோ ரிவீயூ செய்வதுபோலவோ றேங் கொடுப்பதுபோலவோ நீங்கள் எதுவும் செய்ய முடியாது.

அன்று நான் சாப்பிட போயிருந்தேன். பரிமாறும் பையன் பம்பரமாய் சுழன்று வேலை செய்து கொண்டிருந்தான்.

எனக்கு எதிர் மேசையில் இரு இளைஞர்கள் வந்தமர்ந்தார்கள். பையன் போய் என்ன சாப்பாடா சோட்டீட்ஸா என்று கேட்டான். (இனித்தான் தொடங்குது டயலாக்.

" றெச்சி றொட்டியும் கறியும் கொண்டாங்கம்பி "

பையன் போய் பிளாஸ்டிக் ரிஸூ போர்த்திய பிளேற்றுகளை வைத்து விட்டு போனான்.

**விமல் குழந்தைவேலு**

" அலோ! றெச்சி றொட்டி இப்ப சாப்பிட்றத்துக்கா நாளைக்கில்ல குயிக்கா வரோனும்."

" ஆஹ்.. இந்தா வருகுது."

சாப்பிட தொடங்கினார்கள்.

" றெண்டு பிளேண்டியா கெதியா கொண்டாங்கோ "



" இஞ்சி போட்டா ?"

" இல்ல ஒள்ளம் நஞ்சி போட்டு "

பையன் எதுவும் பேசவில்லை… பிளேண்ரீ போடும் வரை என்னிடம் வந்து வேற என்னெண்டாலும் வேணுமாண்ணே என்றான். இல்லையென்று தலையாட்டிவிட்டு எதிர் மேசையையே பார்த்துக் கொண்டிருந்தேன். (எப்பவாவது சந்தர்ப்பம் பார்த்து எழுத ஏதும் கிடைக்காதா என்ற எதிர்பார்ப்புதான் வேறென்ன)

" தம்பே. … பிளேன்ரீ போட தண்ணிக்கு போனாள் வந்திட்டாரா இல்லையாம்பி " ? எவ்வளவு இளக்காரமான பேச்சு … இவர்கள் ஏனிப்படி அந்த பையனை இப்படி செய்கிறார்கள்? இந்த பையனுக்கு மட்டும் எப்படி இவ்வளவு பொறுமை? என்று எனக்கு கூட சற்று கோவம் வந்தது. பையன் பொறுமையுடன் பிளேன்ரீயை கொண்டு வந்து வைத்தான். குடித்துவிட்டு கவுண்டரில் காசை கொடுத்துவிட்டு வெளியே போய் விட்டார்கள்.

நானும் சாப்பிட்டு முடித்து வெளியே வந்தபோது அந்த இரு இளைஞர்களும் போக வெளியே வந்த பையன் இவர்கள் பேசிக்கொண்டு நிற்பதை கண்டு அருகே வந்தான்.

" ஏதோ துணியா தொங்கலுக்கு போறமாதியும், லண்டனுக்கு போக பிளேன் புடிக்க போறமாதியும் அவசரப்படுத்தி திண்ட என்னத்துக்கு … சந்தைக்க குந்திக்கு நிக்கத்தானா? "

இருவரும் சிரித்தார்கள் (மூவரும் நண்பர்களாகவும் இருக்கலாம்)

" சிரிக்கயளா ஒங்கட சொத்தர ஒசிலும் நீங்களும் "

சொல்லிவிட்டு மரக்கறி பையை தூக்கினான் பையன் .

" டேய் ! இஞ்ச வாடோவ் .. என்னடா ஒண்ட பிரச்சினை?"

" வரயா! ..என்ரீஸ்… ஒண்டுமில்ல ஒங்கட கதைய உட்டுப்போட்டு ஓ …… ம மாறுங்க . ஒங்கட செப்பமும் நீங்களும்.

பையன் போய்விட்டான்.. இவர்கள் சிரிக்கிறார்கள்.



ஒருவர் மோட்டபைக்கில் இருக்க மற்றவர் நின்றபடி பேசிக்கொண்டு நின்றார்கள்.

வாசலில் கிடந்த மரக்கறி சாக்கு பையொன்றை உள்ளே கொண்டு

இதுதான் எங்கள் ஊர் ..
வந்துதான் பாருங்களேன்..
கடையில்..சாப்பிடுங்களேன்..
ரிப்போர்ட் அடிச்சுத்தான் பாருங்களேன்.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 52

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

### புணர்ச்சி

- பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்க.

1. பின்வருவனவற்றுள் தோன்றல் விகாரம் இடம்பெற்ற புணர்ச்சி
   (1) வடபுலம் (2) காற்சட்டை (3) புனித தலம் (4) தலைக்கவசம்

2. பின்வருவனவற்றுள் திரிதல் விகாரம் இடம்பெற்ற புணர்ச்சி
   (1) வடபுலம் (2) காற்சட்டை (3) புனித தலம் (4) தலைக்கவசம்

3. பின்வருவனவற்றுள் கெடுதல் விகாரம் இடம்பெற்ற புணர்ச்சி
   (1) தலவிருட்சம் (2) பாலாடை (3) கிளிப்பிள்ளை (4) முட்செடி

4. பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சி
   (1) தலவிருட்சம் (2) பாலாடை (3) கிளிப்பிள்ளை (4) முட்செடி

5. பின்வருவனவற்றுள் கெடுதலும் தோன்றலும் இடம்பெற்ற புணர்ச்சி
   (1) பாடவேளை (2) கோலாட்டம் (3) வலக்கை (4) முட்செடி

6. பின்வருவனவற்றுள் கெடுதலும் தோன்றலும் இடம்பெற்ற புணர்ச்சி
   (1) தாழம்பூ (2) பனங்காய் (3) வாழைக்கறி (4) வானவில்

7. பின்வருவனவற்றுள் திரிதல் விகாரம் **இடம்பெறாத** புணர்ச்சி
   (1) பேசுங்கிளி (2) காற்சட்டை (3) ஆட்பதிவு (4) மாங்கனி

8. பின்வருவனவற்றுள் கெடுதல் விகாரம் இடம்பெற்ற புணர்ச்சி
   (1) வான்கிளை (2) முயற்குட்டி (3) மணமாலை (4) மயிலாட்டம்

9. பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சி **அல்லாதது**
   (1) அழுதல் (2) தேரோட்டம் (3) மண்மேடு (4) மனவேதனை

10. பின்வருவனவற்றுள் கெடுதலும் தோன்றலும் **இடம்பெறாத** புணர்ச்சி
    (1) காலக்கண்ணாடி (2) வரவுத்தாள் (3) காலச்சக்கரம் (4) பழப்பாகு

11. உயிர் முன் உயிர் புணர்வதற்கு எடுத்துக்காட்டு
    (1) வாலாட்டல் (2) புளிக்காய் (3) கண்மடல் (4) கனியிதழ்

12. உயிர் முன் மெய் புணர்வதற்கு எடுத்துக்காட்டு
    (1) அலைகடல் (2) தண்கயம் (3) பனையோலை (4) கடலலை

13. மெய் முன் மெய் புணர்வதற்கு எடுத்துக்காட்டு
    (1) புலக்காட்சி (2) தலைமயிர் (3) படிதல் (4) கலையழகு

14. மெய் முன் உயிர் புணர்வதற்கு எடுத்துக்காட்டு
    (1) குணநலம் (2) மார்தட்டல் (3) கண்ணிமை (4) தண்ணீர்

15. உடம்படுமெய் பெற்றுப் புணர்ந்ததற்கு எடுத்துக்காட்டு
    (1) பாயை (2) நோயை (3) ஈயை (4) வாயை

16. உடம்படுமெய் பெற்றுப் புணர்ந்ததற்கு எடுத்துக்காட்டு
    (1) தலைவாசல் (2) தலையாட்டல் (3) தலைமயிர் (4) தலைச்சுமை

17. உடம்படுமெய் பெற்றுப் **புணராமைக்கு** எடுத்துக்காட்டு
    (1) விலாவென்பு (2) தேஞ்சுவை (3) தலையணை (4) தீயணைப்பு

18. பின்வருவனவற்றுள் குற்றியலுகரப் புணர்ச்சி
    (1) படைப்பாற்றல் (2) சுவர்வெடிப்பு (3) தெளிவாக்கல் (4) சில்லுவண்டி

19. பின்வருவனவற்றுள் வல்லினம் மிகுந்து புணர்ந்தமைக்கு உதாரணம்
    (1) பூங்கொடி (2) அவ்யானை (3) வாட்படை (4) வலைப்பின்னல்

20. வறள் + சி என்பதைப் புணர்த்தினால் வருவது
    (1) வரட்சி (2) வறட்சி (3) வரட்ச்சி (4) வறட்ச்சி

# கற்போம்

இனங்களுக்கு இடையிலான விருத்தி (interspecific breeding)

இனத்துக்கிடையான கலப்புப்பிறப்பாக்கல் எனவும் அழைக்கப்படும் இந்த அணுகுமுறையில், வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் அங்கிகள் இனங்கலக்கப்படுகின்றன. இத்தகைய இனக்கலப்பில் இருந்து பெறப்படும் வழித்தோன்றல் பொதுவாக இரண்டு பெற்றோர் இனங்களிலுமிருந்து வேறுபடுகின்றது. அத்துடன் அது வளமுடையதாக அல்லது பகுதி வளமுடையதாக அல்லது வளமற்றதாக இருக்கலாம்.

தாவரங்கள் விலங்குகளைக் காட்டிலும் அடிக்கடியும் வெற்றிகரமான முறையிலும் கலப்புப்பிறப்பாக்கமடைகின்றன. பூக்குந்தாவரங்களில் இருந்து மகரந்தமணிகள் விரிவான முறையில் பரம்பலடைகின்றன. அத்துடன் இனங்களுக்கிடையே இயற்கையான இனக்கலப்பு நடைபெறத்தக்கதாக பிற இனப் பூக்களின்மேல் விழக்கூடியதாகவும் உள்ளன. தாவர வகைகள் விலங்குகளைக் காட்டிலும் குறைந்தளவு கட்டுப்பாடு கொண்டனவாகக் காணப்படுகின்றன. எனவே உடற்றொழில் ரீதியாக வெற்றிகரமாக தொழிற்படக்கூடிய ஒரு தாவரக் கலப்புப்பிறப்பு வடிவம் உடனடியாகத் தோற்றம் பெறுகின்றது.

அநேகமாக இனத்துக்கிடையிலான கலப்புப்பிறப்புகள் வளமற்றவை அல்லது சில காரணங்களின் நிமித்தம் பெற்றோருக்குரிய இனங்களுடன் இனங்கலக்கப்பட முடியாதவை. அவ்வப்போது வளமற்ற இனத்துக்கிடையான கலப்புப் பிறப்புகள் தமது நிறமூர்த்தக் கூட்டத்தை இரட்டிப்பாக்குவதுடன் வளமான நான்மடியமுள்ளவையாகி விடுகின்றன. (நான்கு கூட்ட நிறமூர்த்தங்கள்) உதாரணமாக, மனிதர்கள் இன்று பயன்படுத்தும் கோதுமைகள், ஒவ்வொன்றும் நிறமூர்த்த இரட்டிப்பை தொடர்ந்து மேற்கொண்ட இரண்டு கலப்புப்பிறப்பாக்கங்களின் பெறுபேறாக உற்பத்திபண்ணப்பட்ட வளமான அறுமடியங்கள் (ஆறு கூட்ட நிறமூர்த்தங்கள்) ஆகும். அத்தகைய சந்தர்ப்பங்களில் கலப்புப்பிறப்புகள் இரண்டு பெற்றோர்களிலிருந்தும் பெற்ற இயல்புகளுடன் புதிய இனங்களாக வரக்கூடியனவாக உள்ளன. பருமனிலும் இனப்பெருக்க ஆற்றலிலும் ஒன்று அல்லது கூடிய பெற்றோர்கள் கலப்புப்பிறப்பாக்கத்தில் பயன்படுத்தப்படும் பொழுது பயிர் விளைச்சல்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கின்றது.

உதாரணமாக, Boysenberries (Rubus ursinus x idaeus) என்னும் பழங்கள் கலிபோர்ணியாவில் Knott's Berry Fram என்னும் தோட்டத்தில் விருத்தி செய்யப்பட்டன. அவையாவன, Blackberries (Rubus froticosus), European raspberries (Rubus idaeus) மற்றும் Loganberries (Rubus x Lohanobaccus) என்பனவையாகும். கிடைக்கப்பெறக்கூடிய மூலவுயிர்முதலுருவின் உள்ளக இயற்கையில் காணப்படக்கூடிய பீடை மற்றும் நோயெதிர்ப்புத்திறன், பழத்தின் தரக் கூறுகள் முதலியவற்றின் மூலகங்களைப் பயன்படுத்தும் நோக்குடன் பழப்பயிர் இனங்களுக்கிடையான இனவிருத்தியின் பயன்பாடு அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக Malus asiatica மற்றும் Malus pumitolia போன்றவற்றிலிருந்து Malus domestica எனப்படும் ஒரு கலப்புப்பிறப்பைத் தோற்றுவித்ததன் மூலம் அப்பிள் பழத்தின் மாரிகாலக் கடினத்தன்மை திருத்தியமைக்கப்பட்டது.

எவ்வாறாயினும், விலங்குகளுக்கிடையே இனங்களுக்கிடையான இனவிருத்தி, ஒரு சில இனங்களுக்கு மட்டுப்பட்டுள்ளதாக உள்ளது. பொதுவாக உதாரணங்கள்: கோவேறு கழுதை (ஆண்கழுதை + பெண் குதிரை), கினி/Hiny (ஆண்குதிரை + பெண்கழுதை) கோவேறு கழுதைகளிலும் Hiny களிலும் பெற்றோரின் பொதுவான சாதியாக Equus உம் Liger இல் panther வும் இருப்பதைக் கவனிக்கவும் பிற உதாரணங்களாக வரிக்குதிரை/கழுதை இனக் கலப்பான Zonkey மற்றும் வரிக்குதிரை/குதிரை இனக்கலப்பான Zorse ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இதிலிருந்து பெறப்படும் எச்சங்கள் நிறைவுடலிகளாக விருத்தியடைந்தாலும் அவை தொழிற்பாடுள்ள புணரிகளை விருத்திசெய்ய முடியாமல் போகலாம் வளமற்ற (மலடான) தன்மையானது பொதுவாக இரண்டு இனங்களும் கொண்டு காணப்படும் நிறமூர்த்தங்களின் எண்ணிக்கைக்கு சார்புடையதாகக் காணப்படுகின்றது. உதாரணமாக கழுதைகள் 62 நிறமூர்த்தங்களையும் குதிரைகள் 64 நிறமூர்த்தங்களையும் கொண்டு காணப்படுகின்றன.

இனவிருத்தி நுட்பமுறைகளின் பிறப்புரிமையியல்புக்குரிய தத்துவங்கள்

தாவர மற்றும் விலங்கு இனவிருத்தியின் ஆரம்பத்திலிருந்தே விவசாயிகள் பிறப்புரிமையியலின் எண்ணக்கருக்கள் பற்றி அறிந்தும் அறியாமலும் அதன் தத்துவங்களைப் பயன்படுத்தினர் பின்வரும் பகுதி, விலங்கு மற்றும் தாவர இனவிருத்தியில் பிரயோகிக்கப்பட்டு பரந்தளவில் பயன்படுத்தப்படும் மூன்று பிறப்புரிமையியலுக்குரிய தத்துவங்களை விளக்குகிறது.

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# கற்போம்

## விஞ்ஞானம்

குணம் சவரிராஜா

### வெளியகவிருத்தி (Outbreeding)

வெவ்வேறு வர்க்கங்களை (குலங்களை) ச் சேர்ந்த தாவரங்கள் அல்லது விலங்குகளை ஒன்றுடனொன்று இனங்கலத்தல் வெளியகவிருத்தி அல்லது கலப்பினம் விருத்தி எனப்படும். இது உள்நாட்டுக்குரிய பெற்றோர் கொண்டிராத வெளிப்பிரதேசத்துக்குரிய பெற்றோரின் விரும்பப்படும் இயல்புகள் வழித்தோன்றல்களுக்குக் கடத்தப்படுவதை அனுமதிக்கும்.

உதாரணமாக, பால் மற்றும் றைச்சி உற்பத்தியை அதிகரிப்பதற்கு கலப்பின்விருத்தி விலங்கு இனவிருத்தியானளர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தியாவில் வழித்தோன்றல்களின் பால் உற்பத்திதிறனை அதிகரிக்கச் செய்ய, Zebu வர்க்க மாடுகளும் சிறப்பான பண்புகளைக் கொண்டிராத மாடுகளும், Holostein Fresian, Brown Swiss மற்றும் Jersey காளைகள் அல்லது சுக்கிலத்துடன் இனங்கலக்கப்படுகின்றன. இதுபோன்றே Corn மற்றும் சணல் போன்ற தாவரங்களும் பொதுவாகக் கலப்பினவிருத்தி செய்யப்படுகின்றன.

### கலப்பினப்பெருக்கம் (Hybrid Breeding)

ஒரே இனத்திலுள்ள பிறப்புரிமையியல் ரீதியில் சார்பற்ற தூயவழிமுறையான தாவரங்கள் அல்லது விலங்குகள் ஒன்றுடனொன்று கலக்கப்படும்பொழுது, அது கலப்பினப்பெருக்கம் அல்லது புறஇனக்கலப்பு என அழைக்கப்படும்.

ஆறு சந்ததிகள் வரை வம்சாவழியின் இருபக்கங்களிலும் பொது மூதாதையர்களைப் பங்கீட்டுக்கொள்ளாத தாவரங்களுடன் விலங்குகளுடனும் இது மேற்கொள்ளப்படுகின்றது. அத்தகைய கலப்பு ஒன்றின் எச்சங்கள் புறக்கலப்புக்கள் (outcross) என அழைக்கப்படும். அவை நிலையுறுதியான இயல்புகளையும் கலப்புப்பிறப்புரன்னையும் (hyvridvigour) கொண்டிருக்கும். Heterosis என அழைக்கப்படும் இந்த கலப்புப்பிறப்புரன் பெற்றோரிலும் கூடியதான பருமன், வளர்ச்சி வீதம், கருக்கட்டுந்தன்மை மற்றும் விளைச்சல் போன்ற இயல்புகளில் கலப்புப்பிறப்புகளில் அதிகரித்தல் ஆகும்.

தாவரம் மற்றும் விலங்கு இனவிருந்ததியாளர்கள் விரும்பப்படும் சில இயல்புகளைக் கொண்ட இரண்டு வேறுபட்ட தூயவழி வர்க்கங்களைக் கலப்பதன் மூலம் கலப்புப்பிறப்புரன்னை சுரண்டுகின்றனர். முதல் சந்ததிக்குரிய எச்சம் பொதுவாக இரண்டு பெற்றோர்களினதும் விரும்பப்பட்ட இயல்புகளைப் பெருமளவாகக் காண்பிக்கும் எனினும் கலப்புப்பிறப்புகள் ஒன்றுகலக்கப்படுமெனில், இந்த ஆற்றல் குறையலாம். எனவே ஒவ்வொரு புதிய பயிருக்கும் அல்லது விரும்பப்பட்ட கூட்டத்துக்குமாக இனங்கலக்கப்பட்டு பெற்றோருக்குரிய வழிகள் பேணப்படவேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் F1 கலப்புப்பிறப்பு வித்துகள் அறுவடை செய்யப்படக்கூடியதாக தூயவழிகளைள உருவாக்குதல் தொடர்ந்து பேணப்பட வெண்டியுள்ளதால் கலப்புப்பிறப்புக்களை உருவாக்குவதற்கு பல ஆண்டுகால ஆயத்தம் தாவர இனவிருத்தியில் தேவைப்படுகின்றது. இதனால் வித்துகள் பெருஞ்செலவு மிக்கதாக வருகின்றன. இருந்தேபோதிலும், கலப்புப்பிறப்பு வித்துகள் விவசாய உற்பத்தியில் மிகப்பெரியளவானதோர் தாக்கத்தை ஏற்படுத்திவட்டன. ஐக்கிய நாடுகளில், விவசாயிகளின் முன்னேற்றமடைந்த கலாச்சாரச் செயற்பாடுகளுடன் இணைந்ததான பரந்தளவான பயன்பாடு, கடந்த 50 வருடங்களில் 1930 களில் ஏக்கருக்கு சராசரியாக 35 புசல்களில் இருந்து 1990 களில் ஏக்கருக்கு 115 புசல்கள் என சோளத்தின் விளைச்சல் மூன்று மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது. உலகில் வேறு எந்தப் பிரதான பயிரும் இந்த வெற்றிகரமாக கதையின் அளவுக்குச் சமமாக வரவில்லை.

பிரபலமான மரக்கறி மற்றும் அலங்காரத் தாவரங்களில் அநேகமானவை கலப்புப்பிறப்புக்களாகும். மேம்படுத்தப்பட்ட தாவர இயல்புகள் சார்பாக வெப்பவலய மரக்கறித் தாவர இனவிருத்தியாளர்கள், கடந்த இரண்டு சகாப்தங்களுக்கு லோக ஈட்டப்பட்ட தெளிவான சாதனைகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டக் கூடியவர்களாக உள்ளன.

- விளைச்சல் முன்னேற்றம். முன்னேற்றமடைந்த கலப்புப்பிறப்புரன், பாரம்பரிய நோயெதிர்ப்புத் திறன், தகைப்பின் கீழ் கனிகள் தோற்றுவிக்கப்படுதல் மற்றும் பெண்/ஆண் விகிதங்கள் காரணமாக கலப்புப்பிறப்புகள் பாரம்பரிய தூ யவழிப்பேதங்களைகப் காட்டிலும் 50-100மூ விஞ்சியதாகக் காணப்படுகின்றன.
- நீடிக்கப்பட்ட வளர்ச்சிப்பருவகாலம். குலப்புப்பிறப்புகள் பெரும்பாலும் தூயவழி விருத்திசெய்யும் பேதங்களைக் காட்டிலும் ஏறத்தாழ 15 நாட்களுக்கு முன்னரே முதரிச்சியடைந்து விடுகின்றன. தூயவழிவிருத்திக்கு மேலாக கலப்புப்பிறப்புக்களின் சார்பான அனுகூலம், அநேக தாவரங்களுக்கு தகைப்பு நிலைமைகளின் கீழேயே கிடைக்கின்றது.
- தரமுன்னேற்றம். உற்பத்தித் தரத்தை உயர்வாகவும் ஒரு சீரான மட்டத்திலும் நிலைபேறடையச் செய்வதற்குக் கலப்புப்பிறப்புகள் உதவியுள்ளன. இது நுகர்ச்சித்தரத்தை உயர்த்துவதாக உள்ளது. (உதாரணம் மெழுகுச் சுரைக்காயின் உறுதியான சதை, நீர்பூசணியின் மொருமொருப்பான சுவை)

# அறிவோம் - தெளிவோம் - பகிர்வோம் - 52

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

### பதம்

- பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்க.

1. ‘அழுதான்’ என்பதன் பகுதி
   (1) அழு (2) அழுது (3) அழுதல் (4) ஆன்
2. ‘பார்த்துக்கொண்டான்’ என்பதன் பகுதி
   (1) பார் (2) பார்த்து (3) பார்த்துக்கொள் (4) பார்த்துக்கொண்டு
3. ‘போய்க்கொண்டிருக்கிறான்’ என்பதன் பகுதி
   (1) போ (2) போய்க்கொண்டிரு (3) போய்க்கொள் (4) போய்க்கொ
4. ‘கண்டான்’ என்பதன் பகுதி
   (1) கண் (2) கண்டா (3) கண்டு (4) காண்
5. ‘வருகிறான்’ என்பதன் பகுதி
   (1) வரு (2) வருகி (3) வா (4) வ
6. ‘கண்டான்’ என்பதிலுள்ள இடைநிலை
   (1) ண் (2) ட் (3) ன் (4) டா
7. பின்வருவனவற்றுள் விகாரம் இடம்பெற்றுள்ள சொல்
   (1) வந்தான் (2) சிரித்தான் (3) ஓடுகிறான் (4) தொழுவான்
8. பின்வருவனவற்றுள் சாரியை வந்துள்ள சொல்
   (1) வாழைக்கறி (2) தாழங்குடா (3) அவ்வாறு (4) கலங்கல்
9. தசரதன் கொடுத்த வரத்தால் இராமன் காடேகினான். இங்கு ‘வரத்தால்’ என்பதிலுள்ள ‘அத்து’ என்பது
   (1) பகுதி (2) விகாரம் (3) பெயரிடைநிலை (4) சாரியை
10. ‘ஊட்டியது’ என்பதில் வந்துள்ள இடைநிலை
    (1) ஊட்டு (2) டி (3) ஊட்டி (4) இ
11. பின்வருவனவற்றுள் சாரியை இடம்பெற்றுள்ள சொல்
    (1) காட்டிற்கு (2) காட்டை (3) காட்டில் (4) காட்டிலிருந்து
12. பின்வருவனவற்றுள் சந்தி இடம்பெற்றுள்ள சொல்
    (1) வாழ்கிறான் (2) வாழ்வான் (3) அடித்தான் (4) படித்தல்
13. ‘தாழ்ந்தது’ என்பதில் வந்துள்ள சந்தி
    (1) ந் (2) த் (3) த (4) து
14. பின்வருவனவற்றுள் சாரியை இடம்பெற்றுள்ள சொல்
    (1) மண்முனைப்பற்றில் (2) அக்கரைப்பற்றில் (3) சிலவற்றில்
    (4) ஒற்றைப்பனை
15. பகுதி, விகுதி ஆகியன மட்டும் இடம்பெற்றுள்ள சொல்
    (1) வருக (2) கூனி (3) தின்பண்டம் (4) ஆகினான்
16. பின்வருவனவற்றுள் ஆறு உறுப்புக்களும் இடம்பெற்றுள்ள சொல்
    (1) கடந்தது (2) கடந்தான் (3) கடவு (4) கடப்பான்
17. பின்வருவனவற்றுள் விகாரம் இடம்பெறாத சொல்
    (1) செத்தான் (2) நடந்தனன் (3) அழுதனன் (4) வாழ்ந்தான்
18. ‘போனான்’ என்பதில் வந்துள்ள இடைநிலை
    (1) னா (2) னான் (3) இன் (4) ன்
19. ‘செய்யும்’ என்பதன் விகுதி
    (1) யும் (2) ம் (3) உம் (4) ய்யும்
20. பின்வருவனவற்றுள் பகுதி இரட்டித்துக் காலம் காட்டும் சொல்
    (1) நாட்டுப்பற்று (2) தொடுத்தான் (3) கட்டளை (4) தொட்டான்

# 1980 களின் முற்பாதி..

சூரியனின் கதிர்கள் ஓய்வெடுக்கும் நேரம். காந்தன் தனது சைக்கிளை ஓடியபடி வலது கையில் இன்னொரு சைக்கிளைப் பிடித்தபடி வந்து கொண்டிருந்தான். முகத்தில் பயப்பிராந்தி. என்ன சொல்வது... என்னவென்று சொல்வது மனதில் ஆயிரம் கேள்விகள்.

தயங்கித் தயங்கி வலது கைச் சைக்கிளுக்கு உரிய வீட்டிற்குச் சென்றான். பூவரசம் மரங்கள் கொண்ட கிடுகுவேலி உள்ள வீட்டு வளவு வாசலில் நின்றான். தனது சைக்கிளை வெளி வேலியில் சாத்திவிட்டு மற்றச் சைக்கிளை தயங்கித்தயங்கி உருட்டிக் கொண்டு சென்றான். அந்த வீட்டிலிருந்து சைக்கிளிற்கு உரிமையானவனது உறவுகள் வந்தார்கள்.



" ஏன் தம்பிக்கு என்ன நடந்தது? சைக்கிளை மட்டும் காந்தன் ஏன் கொண்டு வருகிறீர்கள்," என மிகுந்த பதட்டத்துடன் கேட்டார்கள். காந்தன் மிகவும் பயந்து தயங்கித் தயங்கி "அது வந்து காந்தன் இயக்கத்துக்கு ........" மிகுதி வசனம் சொல்லி முடிக்க முன்பு முழுக் குடும்பமும் வீரிட்டு அழுதது. குய்யோ முறையோவென்ற அழுகை கேட்டு அயலட்டை சனமெல்லாம் ஓடி வந்தார்கள். "சைக்கிளுக்கு உரிய முகுந்தன் இயக்கத்துக்குப் போய் விட்டான்" என்ற செய்தி கேட்டு அழுதார்கள்.

முகுந்தனின் தாய் நிலத்தில் புரண்டு புரண்டு அழுதாள். தாயுடன் முகுந்தனின் அம்மம்மா, சிறிய தாய், பெரிய தாய், மாமி, எனப் பெண்கள் குழுவொன்று ஒப்பாரி வைக்கவில்லையே தவிர ஒரு செத்த வீட்டுக்குரிய அழுகை ஒலிகள் ஊரை அதிர வைத்தது. முகுந்தனின் தகப்பன் அரச பணியில் சிறியதொரு உத்தியோகம். வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிப் பிள்ளைகளை வளர்த்தார். தனது 4 பிள்ளைகளில் மூத்த மகனான முகுந்தன் படிப்பில் மிகவும் கெட்டிக்காரன்; முன்னணிக் கல்லூரியொன்றில் உயர்தரம் படித்து வந்தான். அவனைப் பார்த்து மற்றப் பிள்ளைகளும் படித்து நன்றாக வருவார்கள் என்ற கனவு கண் முன்னாகக் கலைந்த போது அவர் ஏங்கிப் போனார்.

சத்தம் பெரிதாக வராமல் குலுங்கிக் குலுங்கி அழுதார். சோகமான நிலையைக் கண்ட முகுந்தனின் தம்பி, தங்கைகளும் வீரிட்டு அழுதனர். இது போன்ற அழுகைகள் ஒரு காலத்தின் சோகம் தான். படிக்கப் போன பிள்ளையின் சைக்கிளைக் கூடப் போன நண்பன் கொண்டு வரும் போது செத்த வீடு என்று சொல்லுமளவுக்கு ஒரு சூழ்நிலை இருந்தது. சைக்கிளைக் கட்டிப்பிடித்தபடி அதைத் தமது பிள்ளையாக நினைத்துக் கதறிக் கதறி அழுத தாய்மார்கள், தகப்பன்கள், சகோதரர்கள், உற்றார் உறவினர்கள் இருந்தார்கள்.

காலையில் பாடசாலை சென்ற பிள்ளை பாடசாலை முடிந்தவுடன் சைக்கிளை அப்படியே கைவிட்டபடி இயக்கத்திற்குப் போதல் சாதாரண ஒன்றாக இருந்தது. ரியூசன் படிக்கப் போய் வீட்டிற்குத் திரும்பிப் போகாமல் சைக்கிளைக் கைவிட்டபடியே இயக்கத்துக்குப் போனார்கள். பாடசாலை அதிபரோ, ஆசிரியர்களோ அல்லது ரியூசன் ஆசிரியர்களோ தயங்கித் தயங்கிச் சைக்கிளை வீட்டிற்குக் கொண்டு செல்லும் போது வெளிப்படும் அழுகையொலி அதன் சோகங்கள் சொல்லி மாளாது.

சைக்கிள் இல்லாமல் நடந்து படிக்கப் போன இளைஞன் போராளி இயக்கம் ஒன்றுக்குப் போன போது அவனைக் காணாமல் தேடி அலைந்து இறுதியில் கீரிட்டு அழும் சோகங்கள் நடந்தது. இயக்கம் என்ற சொல்லுக்குள் பல பெயர் கொண்ட போராளி இயக்கங்கள் இருந்தார்கள். 1983 யூலை 25 இல் தமிழர் அழிப்பு அரச ஆசீர்வாதத்துடன் நடந்தது. அதன் பின் விளைவு தாயகக் கனவுடன் ஆயிரமாயிரம் இளைஞர்களைப் போராளி இயக்கங்களுடன் இணைத்தது. திரைகடல் ஓடித் திரவியம் தேடிய இனம் திரைகடல் தாண்டித் தாயகக் கனவுடன் படகேறியது. போராளி இயக்கங்களில் இணைந்தார்கள். பயிற்சி எடுத்தார்கள். அவன் யுபி (UP – உத்திரப் பிரதேசத்தில் பயிற்சி எடுத்தவர்களை அப்படித் தான் அழைத்தார்கள்.)

"அவன் லெபனான். இவன் பலஸ்தீனம், அவன் செங்கல்பட்டு " இப்படியாக

**வேதநாயகம் தபேந்திரன்**

போராளி இயக்கங்களில் இணைந்தோரை அவரகளது பயிற்சி முகாம்களின் பெயரால் அழைத்தார்கள். அண்ணன் ஒரு இயக்கம், தம்பி வேறொரு இயக்கம். என இருந்த பல குடும்பங்கள் இருந்தன. வீட்டிற்கு வந்தால் அண்ணன், தம்பி இயக்க வேறுபாடு மறந்து அன்னையின் மடியில் ஒரு தாய்ப் பிள்ளைகளாக இருந்தார்கள்.

சிலரோ தமது இயக்கத் தலைமைகளின் கொள்கைகளைச் சொல்லி தனது இயக்கம் பெரிது உனது இயக்கம் சரியில்லையென்று உள் வீட்டில் சண்டை பிடித்த அண்ணன் தம்பிகளும் இருந்தார்கள். போராட்ட இயக்கங்களில் பிள்ளைகள் சேராமல் இருக்க வெளிநாடுகளுக்குப் பிள்ளைகளை அனுப்பி வைத்த வசதி படைத்த பெற்றோர்களும் இருந்தார்கள். தமது நகை நட்டு காணி பூமியை ஈடு வைத்து அல்லது வித்துச் சுட்டு புலம் பெயரச் செய்த புத்திசாலிப் பெற்றோரும் இருந்தார்கள்.

உணர்வுடன் போராடிய தலைமுறையொன்றும் இருந்தது. பெற்றோருக்காகத் தமது உணர்ச்சிகளை ஒதுக்கிப் புலம் பெயர்ந்தோரும் இருந்தார்கள்.

தாழ்த்தபட்ட சமூக மக்களில் மிகப் பெரும்பாலானோர் நில உடமை அற்றவர்களாக இருந்தார்கள். ஆயினும் பணச்சடங்கு எனப்பட்ட பணவரவுக் கொண்டாட்டங்களின் ஊடாக பணத்தைத் திரட்டினார்கள். புலம் பெயரச் செய்தார்கள். அல்லது ஆரம்பத்தில் சின்ன நாடு ஒன்றுக்கு அனுப்பினார்கள். ஈரான், ஈராக், சவூதி அரேபியா, ஜோர்தான் போன்ற மத்திய கிழக்கு நாடுகளைச் சின்ன நாடுகளென யாழ்ப்பாணத்தில் அழைக்கும் வழக்கமுள்ளது. பிரான்ஸ், சுவிற்சலாந்து, கனடா போன்ற மேற்கத்தைய நாடுகளைப் பெரிய நாடுகள் என அழைக்கும் வழக்கம் உள்ளது.

போராட்ட இயக்கங்களிடையே மோதல் தொடங்கியதும் அலைஅலையாகப் போராளியாகப் போன தருணங்கள் குறைந்தது. பின்னாளில் புலம் பெயர்வின் தொகை கூடியது. புலம் பெயர்வு பெருக்கல் விருத்தித் தொடரில் நிகழ்ந்தது. ஒருவர் சென்றால் தனது குடும்ப உறவில் இன்னொருவரை அழைத்தார். பின்னர் இருவர் சேர்ந்து இருவரை எடுத்தார்கள். பின் நால்வர் நால்வர். எண்மர் எண்மர் எனப் பெருகியது. சைக்கிளைக் கண்டு செத்த வீடு கொண்டாடிய வீடுகள் பல பின்னாளில் போரில் இறந்த போராளியின், அல்லது சகோதரச் சண்டையில் இறந்த போராளியின் உடலை வைத்து உண்மையான செத்த வீடுகளும் கூட நிகழ்ந்தது. காலமாற்றம், காட்சி மாற்றங்கள் பலவற்றைத் தந்துள்ளது.

---

தொடர்ச்சி...

## சொல்லத் துணிந்.....

மக்கள் நலன் சார்ந்ததாகும்.

அது போலவே கிழக்கைத்தளமாகக் கொண்டு படிப்படியாக மேற்கிளம்பிவருகின்ற தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியும் வடக்கு கிழக்கு இணைந்த தாயகக் கோட்பாட்டிற்கோ – வடக்குக்கோ – வடமாகாணமக்களுக்கோ எதிரான கருத்துக்களையும் செயற்பாடுகளையும் தவிர்த்துக் கொண்டு கிழக்குத் தமிழர்களின் எதிர்காலத்தை அறிவு பூர்வமாகக் கையாளும் வகையில் தங்களை அரசியல் ரீதியாகத் தகவமைத்துக் கொள்ளவேண்டும்.

யாழ்மேலாதிக்கத்திற்கு எதிராகச் செயற்படுவதில் தவறில்லை. அவ்வாறு செயற்படத்தான் வேண்டும். ஆனால் அது வடக்குகிழக்கு இணைந்த தாயகக் கோட்பாட்டிற்கு எதிரானதாகத் தடம் புரளக்கூடாது. இங்கேதான் தத்துவார்த்தத் தெளிவு அவசியம்.

அந்த வகையில் கிழக்கில் செயற்படுகின்ற சகல தமிழ் அரசியல்கட்சிகளையும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினூடாக ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் ஒன்றிணைப்பதற்கான அரசியல் கூட்டணியை உருவாக்கும் முயற்சிக்குத் தனது பூரணமான பங்களிப்பை நிபந்தனையின்றி வழங்க தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி மனப்பூர்வமாக முன்வரவேண்டும். அது ஒன்றுதான் விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டிருக்கும் கிழக்குத் தமிழர்களுக்கு எதிர்காலத்தின் மீது நம்பிக்கையை ஊட்டும். எதிர்காலத் தலைமுறை தம்மைச் சபிப்பதற்கு எந்தத் தமிழ் அரசியல் கட்சியும் இடமளித்துவிடக்கூடாது.

தொடர்ச்சி...

## பாகிஸ்தான்......

சமையல் எண்ணெய் மேலும் தீயை கூட்டியுள்ளது." என பாகிஸ்தான் ரயில்வே அமைச்சர் ஷேக் ரஷித் அகமது தெரிவித்துள்ளார்.

நீண்ட தூர பயணங்களில் சமையல் செய்வதற்கு பயணிகள் ரயிலில் அடுப்புகளை எடுத்து வருவது பெரும் பிரச்சனையாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். பஞ்சாப் மாகாணத்தின் தெற்கு பகுதியில், ரஹிம் யார் கான் நகருக்கு அருகில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் இம்மாதிரியான ரயில் விபத்துகள் அதிக உயிர்ப்பலியுடன் இதற்கு முன்பும் நடைபெற்றுள்ளன. பொதுவாக அங்கு நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகளவிலான பயணிகள் பயணிப்பதால் இம்மாதிரியான விபத்துக்களில் அதிக உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

நன்றி : பிபிசி

தொடர்ச்சி...

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள்

ஆரம்பித்துள்ளது. பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள ஆணைக்குழுவின் அலுவலகத்தில் சாட்சிபதிவுகள் ஆரம்பிக்கப்படவிருந்ததாக அதன் செயலாளர் எச்.எம்.பீ.பீ ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சாட்சி விசாரணைகளை நேரடியாக அவதானித்து அறிக்கையிடும் வாய்ப்பு ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதி தேர்தல் பிரச்சார காலத்தில் இதுவரை 2250 முறைப்பாடுகள்

மணித்தியாலங்களில் 112 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி...

## 17 கட்சிகளின் கூட்டமைப்பு

ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய கூட்டமைப்பு இதுவாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

17 கட்சிகள் இருப்பினும் அனைவரும் ஒரு பொது நோக்கத்திற்காக ஒன்றிணைந்துள்ளதாகவும் நாட்டை நேசிக்கும் கட்சிகளே கூட்டணி சேர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெற்றி பெற்ற பின்னர் தன்னுடைய காலத்தில் அனைத்து மக்களுக்காகவும் செயற்படப்போவதாகவும் அதற்காக அனைத்து கட்சிகளினதும் ஒத்துழைப்பை எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.







Published by Arangam News (Pvt) No 196,Trinco Road, Batticaloa and Printed at Express News Papers (Cey) Ltd